704

6 FEB 1931

தொகுதி 9.] 1931௵ ஜனவரி௴ 1௳ [பகுதி 12

மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

இரத்தினபுரி இரகசியம்

(4 - ம் பாகம்)

ஓர் இனிய தமிழ் நாவல்

OFFICE OF THE REGISTRAR
No.
6 FEB 1931

ஸ்ரீமான்

ஆரணி - குப்புசாமி முதலியார் அவர்கள்

எழுதியது.

186553
சென்னை-600 008

சென்னை

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியாரால்

வெளியிடப்பெற்றது.

1931

காப்பிரைட் ரிஜிஸ்தர்] [விலை ரூபா 2—0—0

அம்புஜம்:—அப்படிப்பட்ட காரியத்தை இச்சமயத்தில் நாம் செய்யக்கூடா தென்றுதான் கூறுகிறேன். இரங்கம்மாள் பிரசவவேதனையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாள். இராஜம்மாளும் இப்போதுதான் இரகசியமாகவும் சர்வ ஜாக்கிரதையுடனும் டாக்டரை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாள். இதனால் சிலர் வருவதும் போவதுமான ஜனநடமாட்டம் ஏதேனுமிருக்கும். நாமும் வெளியில் போவதாலும் பிறகு வருவதாலும் நடமாட்டத்தை ஏன் அதிகப்படுத்த வேண்டும்? நடமாட்டம் அதிகமாவதால் ஏதேனும் சப்தம் ஏற்பட்டு இங்குள்ளவர்களும் இளவரசியும் விழித்துக்கொண்டு இங்கு வந்துவிட்டால் நம்பாடு கஷ்டமாய்ப்போய்விடும். மேலும் வண்ணாத்தி சுவர்ணமும் இன்று பிரசவித்தது இளவரசி யல்லவென்றும் தெரிந்துகொண்டுவிட நேரிடும். எல்லாவற்றைக் காட்டிலும் அதிகமாக இரங்கம்மாள் திருட்டுப்பிரசவம் பிரசவிக்கிறாள் என்னும் செய்தியும் அனைவருக்கும் தெரிந்துவிடும்.

ஜானகி:—ஆம்; இச்சமயத்தில் நாம் மிக்க எச்சரிக்கையுடனும் ஜாக்கிரதையாகவும் இருக்கவேண்டுமென்பதை நான் உணர்கிறேன்.

அம்பு:—இங்குக் குறிப்பிட்டவேளைக்கு வரும்படி நீ குமாரவேலிடன் சொன்னபோது அந்த வேளையில் போகாவிட்டால் நீங்களிருவரும் சந்திக்கமுடியாதபடி ஏதோ அசந்தர்ப்பம் நேர்ந்திருக்கிறதென்று அவர் தீர்மானித்துக் கொள்ளவேண்டுமென நீ கூறவில்லையா?

ஜானகி:—ஆம்; அவ்வாறே எச்சரிக்கை செய்திருக்கிறேன். மேலும் குறிப்பிட்ட வேளையில் நான் வராவிட்டால்

அதன்பிறகு ஐந்து நிமிஷமும் அங்குக் காத்திராமல் போய்விட வேண்டுமென்றும் கூறி யிருக்கிறேன்.

அம்பு:—நானும் கர்னல் மாரப்பனிடம் அவ்வாறே கூறியிருப்பதால் இப்போது நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. நாம் இருவரும் அங்கு போகவில்லையென்று தெரிந்தால் அவர்களிருவரும் உடனே அவரவர் வழியைப் பார்த்துக்கொண்டு போய்விடுவார்கள்.

ஜானகி:—(விசனத் தொனியுடன்) ஐயோ! நான் குமாரவேலிடம் இன்று இரவு எப்படிப்பட்ட தடை ஏற்பட்டபோதிலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அவரைச் சந்திப்பதாக வாக்களித்துவிட் டிருக்கிறேனே?

அம்பு:—நானும் கர்னல் மாரப்பனிடம் இதேமாதிரி கூறிவிட் டிருக்கிறேன். எனினும் என்செய்வது? நாம் இருவரும் நம் இஷ்டப்படி நடந்துகொள்ளக்கூடிய சுதந்தரமுடையவர்களாக இல்லையென்பதை அவர்களிருவரும் அறிவார்களல்லவா? மேலும் அவர்கள் நம்மை அடித்துக்கொண்டு போய்விடுவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருக்கின்றனர். நான் அப்படி ஏமாந்தவளா? கலியாணம் செய்துகொண்டிருக்கும் கர்னல் மாரப்பனுடன் போவதில் பயனென்ன? அவ்வாறே நீயும் விவாகம் செய்துகொண் டிருப்பவனும், இப்போது ஏழையாய்ப் போனவனுமான குமாரவேலுடன் செல்லத் துணியமாட்டாய் என்றே நினைக்கிறேன். அவனுக்கு உன்னிட மிருக்கும் மோகமெல்லாம் போய்விடுமாயின், உடனே உன்னை ஆபத்தில் விட்டுவிடுவான்.

ஜானகி:—குமாரவேல் அவ்வளவு சுயநல முடையவனயும், நல்லெண்ணமற்றவனயு மிருக்கிறன் என்று நீ நினைக்கிருய்?

அம்பு:—ஆட்சேபமென்ன? எல்லா ஆண்களும் அப்படியே; அதிலும் குமாரவேலும்; மாரப்பனும் இரத்தினபுரியில் தங்களுக்குள்ள கடனைக்கொடுக்கமுடியாமலும், மற்றும் பல கஷ்டங்களாலும்தான் அவ்வூரைவிட்டு வெளியேறி இருக்கவேண்டும்; இன்றேல் அவர்கள் இவ்வாறு மறைந்து வாழவேண்டிய அவசியமென்ன?

ஜானகி:—நம்முடைய காதலர்கள் உண்மையில் எந்தக் காரணத்துக்காக, எப்படி நம்முடனேயே வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பூர்த்தியாக அறியமாட்டோமல்லவா?

அம்பு:—அவர்களிருவரும் நம்மிடம் அதிக ஆசை யுள்ளவர்களாக இருக்கிறார்களென்பது வாஸ்தவமே, அவர்கள் தனியாகவும், செல்வமுடையவர்களாகவும் இருந்தால் அவர்களிஷ்டப்படி செய்யலாம். ஆனால் அவர்களிருவருமே விவாகமானவர்களாயும், ஏழைகளாயும் இருக்கின்றனரே. ஆகவே மாரப்பனுடன் ஓடிப்போய் என் வாழ்க்கையையே கொடுத்துக் கொள்ள நான் தயாராக இல்லை. நீயும் குமாரவேல் விஷயத்தில் இவ்வாறே நடந்து கொள்வாயென நிச்சயமாக நம்புகிறேன்.

ஜானகி:—குமாரவேலின் அழகையும், நற்குணங்களையும் கண்டு நான் அதிக சந்தோஷப் படுகிறேனென்றாலும், கலியாணமானவனும், தக்க செல்வ மில்லாதவனுமான ஒருவருடன் ஓடிப்போவதென்பது மிகப்பெரிய தவறுகு மென்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆதலின் விரைவில் நான் குமாரவேலை இழக்க நேரிடும்.

அம்பு:—உலகத்தில் வேறெந்தக் காதலனும் அகப்படமாட்டானா, என் அன்புள்ள தங்கையே! நீ இப்போது முன்

னிருந்ததைவிட அழகாக இருக்கின்றாய். நாளைய தினமே குமாரவேல் உன்னைவிட்டுப் போய்விடுவதா யிருந்தாலும் நீ நீண்டகாலம் வரை உனக்குத் தக்க துணைவனின்று வாழவேண்டிய அவசியமே ஏற்படாது. என் சம்பந்தப்பட்டவரை, மாரப்பன் தன்னுடன் என்னை வந்து விடும்படி இன்னொருமுறை கேட்டால் வரமுடியாதென்றும், அவன் வேண்டுமாயின் என்னை விட்டுப்போய் விடலாமென்றும் சொல்லிவிடப் போகி றேன். நானும் அவனை அதிகம் நேசிக்கிறே னென்றா லும் அவனை என் சர்வாதிகாரியாக ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை.

ஜானகி:—குமாரவேலை இழந்து விடும்படியா சொல்கிறாய்? ஆ; என்ன அன்பு? எனக்கு அவனிடமிருக்கும் அன் பின் காரணமாக வல்லவோ பரஸ்பரம் மிக்க நம்பிக்கை யுடன் எல்லா ரகசியங்களையும் பேசிக்கொண்டோம்.

அம்பு:—மாரப்பனும் என்னுடன் அப்படித்தான் நடந்து கொள்கிறான். பெண்களைத் தங்கள் வழியில்திருப்ப விரும்பும் ஆண்களெல்லாம் இப்படித்தான் நடந்து கொள்வார்கள் என்று முன்னமே கூறியிருக்கிறேனல் லவா? மாரப்பனும், குமாரவேலும் நம்மிடமிருந்து நமது ராணியின் சம்பந்தமான ஏதோ இரகசியங்களைக் கிரகித்துச் செல்லவே முயன்று வருகிறார்கள். ஆதலின் அவர்கள் மிகவும் தாராளமாக நடந்துகொள்ள வேண்டு மென்று கருதுகின்றனர்.

ஜானகி:—இருந்தாலும் அன்பு என்பதொன் றில்லாவிட் டால் இவ்வளவு நேசத்துடன் நடந்துகொள்ள முடியா தல்லவா?

அம்பு:—அன்பா? இல்லவே இல்லை. அவர்கள் தங்களுக் குள்ள மோகத்தால் நம்மிடம் இவ்வாறு நடந்துகொள் கிறார்கள், நாம் இருவரும் கூடியவரை அழகுள்ளவர்க ளாயும், எல்லா சௌகரியங்களைப் பெற்றவர்களாயும் இருக்கின்றோம். ஆகவே மாரப்பனும் குமாரவேலும் நம் அழகில் மோகங்கொண்டு நம்முடைய இன்பத்தை யனுபவிப்பதற்காக ஆசைப்படுவதில் ஆச்சர்யமொன்று மில்லை. மேலும் நம்முடைய இருப்பும், அவர்கள் நமது இன்பத்தை அனுபவிப்பதும் அவர்களுக்கே ஆச்சரிய மாகத் தோன்றுகிறபடியால் அவர்களுடைய ஆவலும் அன்பும் அதிகரிக்கின்றது. இதே நாம் இருவரும் அவர்கள் வசமாகி அவர்களுடன் இரவு பகல் முழு தும் வாழ்வதென்று ஏற்பட்டால் அப்போது அவர்கள் மகா அழகுடையவர்களான எங்களிடமும் அலுப்பு அடைவதைக் காணலாம்.

ஜானகி:—நீ சொல்வதிலும் அதிக உண்மை இல்லாமலில்லை. ஆதலின் என்ன நேர்ந்தாலும் குமாரவேலுடன் ஓடிப் போக ஒருகாலும் ஒப்புக்கொள்ளவே மாட்டேன். என் றாலும் குமாரவேலும் மாரப்பனும் ஒருவரை யொருவர் சந்தித்திருப்பார்களென நீ நினைக்கிறாயா? அப்படி அவர் கள் சந்தித்திருந்தால் நம்மிடம் சொல்லி யிருப்பார்க ளல்லவா?

அம்பு:—அவர்கள் சந்திக்க சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் ஒரு வரை யொருவர் அறியாதவர்போல் போய்விட்டிருப் பார்கள். ஏனெனில் ஒவ்வொரும் மறைந்து வாழ்கிறார் அல்லவா? ஆதலின் அவர்கள் சந்தித்திருக்கமாட்டார்க ளென்றே நினைக்கிறேன். மேலும் அவர்களிருவரும் இராக்காலங்களில் இங்கு வரும்போதும் தனித்தனி

யான பாதைவழியாகவே வரவேண்டியவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் தனித்தனியான நோக்கத்துடன் இங்கு வந்திருப்பதால் அவர்களிருவரும் பரஸ்பரம் தெரிந்தவர்களே யாயினும் ஒருவரிடமிருந்து ஒருவர் மறைந்து கொள்ளவே முயற்சிப்பார்கள். ஆதலின் அவர்கள் சந்திக்காம லிருக்கவே முயற்சிப்பார்கள் என்பது தான் என் அபிப்பிராயம்.

ஜானகி:—என் காதலன் குமாரவேல் மிக ரகசியமாகத் தன் வாழ்க்கையை நடத்துவதில் மிக அலுப்படைந்திருக்கிறான் என்று நிச்சயமாய்க் கூறுவேன்.

அம்பு:—என் காதலனும் அப்படித்தான். இருந்தாலும் உலகில் இவர்களைப்போல் இன்னும் அழகான ஆடவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்களென்று நான் கூறினேனல்லவா? நம்முடைய இப்போதைய காதலர்கள் நம்மைவிட்டுப் போனாலும் போய்விடட்டும். நாம் அவர்களை இருவகையாக உபயோகப் படுத்திக்கொண்டோம். நம்முடைய பாலியப்பருவத்தில் நம் இச்சையை அவர்கள் மூலம் திருப்தி செய்துகொண்டதுடன் இளவரசியின்மீது பழிசுமத்தும் வகையிலும் அவர்கள் நமது ஆட்களைப்போல் இருந்து உதவினார்கள். இராஜம்மாள் இளவரசியின் பழைய ஆடைகளைக்கொண்டு வந்து நம்மிடம் கொடுத்ததால் தான் நாம் நமது காரியத்தில் வெற்றிபெறச் சாத்தியப்பட்டது.

ஜானகி:—ஆம் வாஸ்தவமே. அவள்தான் வண்ணாத்தி சுவர்ணத்தையும் இதையெல்லாம் கவனிக்கும்படியாகச் செய்தாள்.

அம்பு:—அது நல்ல எண்ணமல்லவா? அவள் இளவரசிதான் தன் காதலனை உள்ளே அழைத்து வருகிறாளென

நினைத்திருக்கிறாள். அதற்காக நாம் இராஜம்மாளுக்கு நன்றிசெலுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம்.

ஜானகி:—என்ன இது ஆச்சர்யமாய் இருக்கிறது. திடீரென்று ஒரு ஆடவனைப்போல் மீசைமுதலிய வற்றை வைத்துக் கொண்டு ஆண்வேடம் போட்டுக்கொண்டாயே; இதன் காரணமென்ன?

அம்பு:—இப்போது நான் பலராமனைப்போல் காணப்படவில்லையா? நான் இப்படி வேஷம் போட்டுக்கொண்டு திருட்டுத்தனமாக வெளியில் உலாவும்போது ராஜம்மாள் எப்படியாவது செய்து என்னை வண்ணாத்தி சுவர்ணம் பார்க்கும்படி ஏற்பாடு செய்கின்றாள். நான் அவள் அறையைக் கடக்கு முன்னால் அவள் தன் அறையில் புகுந்து கொள்வதால் நான் இளவரசியின் அறையில் புகாமல் நேராகப் போய்விடுகிறேன் என்பதை அவள் அறிவதில்லை. அந்த வாயாடியாகிய வண்ணாத்தி உண்மையில் பலராமன் அவ்வாறு செல்லவில்லை யென்பதையும், அவ்வேடமணிந்தவள் அம்புஜமென்பதையும் அவள் அறியமாட்டாள்.

ஜானகி:—நாம் அனைவரும் சேர்ந்துகொண்டு, இளவரசியிடம் நம்மை நியமித்தவர்கள் எந்த நோக்கத்தோடு நியமித்தார்களோ அந்த நோக்கத்தைப் பூர்த்திசெய்வதில் நம்மாலியன்றவரை பாடுபட்டு வருகிறோம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

அம்பு:—முக்கியமாக இப்போது சிலநாட்களாக இளவரசியின் மீது பழிசுமத்த பலத்த ஏற்பாடு செய்து வந்ததில் இன்று இரவு நடக்கப்போகும் காரியத்தால் நமது

காரியம் வெற்றியுடன் முடிந்ததாகவே கொள்ள வேண்டும்.

ஜானகி:—ஆம்; இராஜம்மாள் நல்ல ஏற்பாடு செய்தாள். இன்று இரவு பிரசவிக்கப் போகிறவள் இளவரசிதான் என்று வண்ணாத்தி சுவர்ணம் நினைக்கும்படி காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வளவும் இராஜம்மாளின் சாமர்த்தியம்தானே. ஆனால் இளவரசியின் விஷயத்தில் நாம் பரிதாபப்பட வேண்டியதாகத்தான் இருக்கிறது.

அம்பு:—ஆ! நாம் பணக்காரர்களாகவும், சுதந்தரமுடையவர்களாகவும் இருந்தால் அப்பொழுது நம் இனத்தைச் சேர்ந்த நம்மைப்போன்ற ஒரு பெண்ணினிடம் கருணை காட்டவேண்டியது தான். ஆனால் இப்போது நாம் அவ்வாறு செய்ய முடியவில்லை. நாம் அவளுக்கு விரோதமாகத்தான் நடந்து கொள்ளவேண்டியிருக்கிறது. எனினும் இளவரசி பாவம்! நம்மிடத்தில் மிகவும் தாராளமாகவும் நேசத்துடனும் நடந்து கொள்கின்றாள். இன்று காலையும் அவள் நம்மிடம் நேசத்துடன் பேசிய போது நாம் செய்யும் சூழ்ச்சியை நினைத்து வருந்தினேன். ஆயினும் என்செய்வது? அதை ஒருவாறு அடக்கிக் கொண்டு விட்டேன்.

ஜானகி:—அதைப்பற்றி அதிகம் சொல்லாதே! நானும் அத்தகைய உணர்ச்சியைப் பலமுறை பெற்றிருக்கிறேன். நாம் செய்யும் அநீதியைப்பற்றி நினைக்கவும் என்னால் முடிவதில்லை. ஆனால் மாரப்பனும், குமாரவேலும் வெளியில் காத்துக்கொண்டிருப்பார்களோ என்று சந்தேகமாகத்தான் இருக்கிறது. இப்போது மணி பதினொன்றுக்குமேல் ஆகிறதே.

நேயர்களே! பெண்கள் மனம் எப்போதும் அன்புக்கும் அருளுக்கும் பேர்போனது. அன்பும் அருளும் பெண்மைக் குணமென்றே சொல்லப்படுவது வீணுகப் போகவில்லை. இச் சகோதரிகள் மூவரும் பலருடைய நிர்ப்பந்தத்துக் கிணங்க இத்தகைய சூழ்ச்சியில் ஈடுபட்டு இராஜம்மாளின் சொற்படி நடந்து வருகிறார்க ளென்றாலும் பெண்களின் இயற்கை யாண நற்குணம் அவர்களைவிட்டுப் போகவில்லை. தங்களைப் போன்ற ஒரு பெண்பாவிடம் அவர்களும் காருண்யம் காட்டு கின்றார்கள். ஆதலின் ஆண்களோ பெண்களோ இயற்கை யாகவே கொடிய சுபாவ முடையவர்களல்லர். சகவாச தோஷத்தாலும், தங்களைச் சுற்றிலுமுள்ள சமயசந்தர்ப்பங்க ளின் நிலைமைக்கேற்ற படியுமே ஆடவர், பெண்கள் ஆகி யோரின் சுபாவமும் குணங்களும் மாறுதல் அடைகின்றன. ஆதலின் யாவரும், 'நல்லாரோடு இணங்கி இருப்பதுவும் நன்று' என்பதுபோல் நல்லவர்களுடனேயே சம்பந்தம் வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

அம்பு:—ஆமாம்! பதினொருமணிக்கு மேலாய்விட்டது. நாம் பதினொரு மணிக்குத்தான் வருவோமென்று நமது காதலர்களிடம் சொல்லியிருப்பதால் அவர்கள் இன்ன மும் காத்திருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. இரங்கம்மாளின் அறைக்கு நம்மைக்கூப்பிட இன்னும் எவ்வளவு நேரம் பிடிக்குமென்று தெரியவில்லை.

ஜானகி:—இரங்கம்மாள் எப்படி இருக்கிறாளோ, என்னமோ பாவம்! அவளுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட் டால் என்னசெய்வது?

அம்பு:—ஐயோ கடவுளே! இவ்வாறு நம்முடைய விஷயங் களை யெல்லாம் பகிரங்கப் படுத்திவிடக் கூடிய ஒரு

அபாயம் ஏற்பட்டு விடுமோ என்று மனதிலும் நினைக்க வேண்டாம்.

இவ்வாறு சகோதரிகளிருவரும் பேசிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் அவர்கள் இருந்த அறையின் கதவை யாரோ மெதுவாகத் தட்டினார்கள். உடனே அவர்கள் தங்கள் சம்பாஷணையை நிறுத்திக்கொண்டு இரங்கம்மாளின் அறைக்குச் சென்றார்கள். அங்கே ஒரு சிறுவிளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. அந்த சிறுவிளக்கின் வெளிச்சமும் வெளியில் தெரியாதபடியும், அந்த அறையில் என்ன நடக்கிறதென்று ஒருவரும் அறியாதபடியும் இருப்பதற்கேற்ற ஏற்பாடுகள் முன்னெச்சரிக்கையுடன் செய்யப்பட்டிருந்தது. இரங்கம்மாள் படுத்திருந்த படுக்கையைச் சுற்றிலும் திரையொன்று விடப்பட்டிருந்தது. அவள் இன்னவளென்று டாக்டருக்கோ, அல்லது மற்றவர்களுக்கோ தெரியாமலிருக்கும்பொருட்டு அவள் முகமும் நன்றாக முகமூடியால் மறைக்கப்பட்டிருந்தது. மேலும் இராஜம்மாள் அம்புஜத்தின் அறைக்குச்சென்று அவர்களை அழைத்துவரப் போனபோதும் அச்சிறு விளக்கையும் கையில் எடுத்துக்கொண்டு போய்விட்டாள். அந்த இடம் இளவரசியின் மாளிகை என் டாக்டர். மணவாளன் எப்படியேனும் அறிந்துகொண்டு விட்டிருந்தாலும் பிரசவித்தது இளவரசியே என்று அவர் நினைக்க வேண்டுமென்பதுதான் அவள் எண்ணம். ஆகையால் தான் அவள் டாக்டரை அந்த மாளிகைக்கு அழைத்துவந்தபோதும் கண்ணைக் கட்டினாளென்றாலும் அவர் அதை அப்புறப்படுத்திப் பார்த்துவிடாமலிருப்பதற்குரிய ஏற்பாடுகளொன்றையும் செய்யவில்லை.

அம்புஜமும் ஜானகியும் தங்கள் சகோதரியின் அறையில் நுழைந்ததும் டாக்டர் கண்ணைக் கருப்புத் துணியால்

கட்டிக்கொண்ட வண்ணம் இரங்கம்மாளின் படுக்கைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து அவள் கையை நாடி பார்ப்பவரே போல் பிடித்துக்கொண்டிருந்ததைக் கண்டார்கள். அப்போது இராஜம்மாள் அச்சிறுவிளக்கை ஒருமூலையில் வைத்து விட்டு அங்கே ஒரு நாற்காலியைக் குறிப்பிட்டு அச்சகோதரிக ளிருவருக்கும் காட்டினுள். அதனுல் அப்பெண்கள் அங்கே உற்றுப்பார்த்து, தங்கள் சகோதரி இரங்கம்மாளுக்குப் பிறந்த சிறுகுழந்தையை எப்படியோ கொன்று அதை ஒரு கம்பளித்துணியில் சுற்றிவைக்கப்பட்டிருக்கிறதென்றும், டாக்டர், தங்கள் சகோதரியின் தேகநிலைமையைக் கவனித்து வருகிருரென்றும் தெரிந்து கொண்டார்கள்.

சகோதரிகளாகிய அம்புஜமும் ஜானகியும் முதலில் தாங்கள் சகோதரியின் குழந்தை பிணமாக இருப்பதைக்கண்டு அச்சமும் நடுக்கமும் துக்கமு மடைந்தார்களென்றுலும் சிறிது நேரத்துக்குள் அது இறந்துபோனதுபற்றிச் சந்தோஷப்பட்டார்கள். மற்றும் இராஜம்மாளிடமிருந்து அவர்கள் தங்கள் சகோதரி சௌக்கியமடைந்து வருகிருளென்பதை உணர்ந்து இன்னும் திருப்தி யடைந்தார்கள். அப்போது அவர்கள், இராஜம்மாள் செய்த முன்னேற்பாட்டின்படி நடந்துகொண்டு அங்கு பிரசவித்தவள் இளவரசிதான் என்று டாக்டர் அறிந்துகொள்ளும்படி செய்தார்கள். அதாவது அவர்களிருவரும் உடனே பிரசவித்த மாது படுத்திருந்த படுக்கையின் பக்கத்தில் சென்று மிக்க பயபக்தி விசுவாசத்துடன் அவள் கையைப் பிடித்துக்கொண்டு மண்டியிட்டு வணக்கம் செய்து, "எங்கள் அன்புள்ள இளவரசியே!" என்று வாயால் சொன்னுர்கள்.

அப்போது இராஜாம்பாள் அவர்களிருவரும் அவ்வாறு சொன்னதைக்கேட்டு அச்ச மடைந்தவளேபோல் அவர்க

ளிடம் சென்று, "சீ; மெல்லப்பேசுங்கள், பெயரைச் சொல்ல வேண்டாம்" என்றாள். இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த டாக்டர், தன் உதவியைநாடி இப்போது பிரசவித்தது இரத்தினபுரியின் இளவரசியே என்று தீர்மானித்துவிட்டான்.

110 - வது அத்தியாயம்

இவ்வாறாக இராஜம்மாளும் இரங்கம்மாளும் சேர்ந்து செய்த சூழ்ச்சிகளெல்லாம் இதுவரை வெற்றியுடன் முடிந்ததாகவே கொள்ளவேண்டும். மற்றும் அங்கு நடந்த விஷயங்களை இப்போதாவது கவனிக்கவேண்டும். இராஜம்மாள், அம்புஜம், ஜானகி ஆகிய இருவரையும் நாம் மேலேகூறியபடி செய்ய அழைத்துவந்ததுடன் மற்றொரு காரியத்துக்காகவும் அழைத்துவந்தாள். அதாவது இராஜம்மாள் சிறிதுநேரம் வெளியில் போகவேண்டியிருந்தது. அப்போது டாக்டர் ஒன்றும் செய்துவிடாதபடி கவனிக்கவும் அவர்கள் வேண்டியதாயிருந்தது.

ஆதலால் அவள் உடனே அவ்வறையைவிட்டு மிக அவசரமாக வண்ணாத்தி சுவர்ணத்தின் அறைக்குச் சென்றாள். அங்கே வண்ணாத்தியும் இந்த ஆச்சர்யமானதும், ரகசியமானதும், முக்கியமானதுமான விஷயத்தை அறியும் பொருட்டு மிக ஆவலுடன் காத்திருந்தபடியால் இராஜம்மாள் உள்ளே நுழைந்ததும், "என்ன சமாசாரம்? எப்படி முடிந்தது?" என்று கேட்டாள். அதற்கு ராஜம்மாள், "எல்லாம் சௌகரியமாகவே முடிந்தது; ஆனால் குழந்தை இறந்துவிட்டது" என்றாள். இதைக்கேட்ட வண்ணாத்தி மிக வருத்தத்

துடன், "ஐயோ பாவம்; இறந்துவிட்டதா?" என்றாள். உடனே இராஜம்மாள், "இறந்துவிட்டாலென்ன? அதைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. அவ்வாறு இறந்துவிட்டதுதான் நல்லதாயிற்று" என்றாள். அப்போது வண்ணாத்தி சுவர்ணம், "சரி; எப்படியோ ஒருவிதமாய் முடிந்துவிட்டது; இப்போது என்னாலாகவேண்டிய காரியம் யாதாயினும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்றாள்.

அப்போது இராஜம்மாள், 'நல்லது அம்மா! அதற்காகத் தான் இங்கே வந்தேன். நீ தான் என் ரகசியங்களை வெளி விடமாட்டாய் என்றும், அறிவுள்ளவளாயும் சாமார்த்திய முள்ளவளாயும் இருக்கிறாய் என்றும் நான் கருதுகிறபடியால் உன்னை நம்பி இங்குவந்தேன். இதுவரை எனக்குதவி செய்ததேபோல் இப்போது நீ இன்னும் அதிகமான உதவிசெய்ய வேண்டியதா யிருக்கிறது. அதாவது குழந்தையை வெளியில் எடுத்துக்கொண்டு போய்விடவேண்டும். டாக்டரும் வெளியில் போகத் தயாரா யிருக்கிறார்! என்றாள்.

வண்ணாத்தி:—அம்மா! டாக்டரின் பெயர் என்ன?

இராஜம்மாள்:—பெயர்? டாக்டர், மணவாளன். அவர் வீட்டுக்குப்போகத் தயாராயிருப்பதால் அவரை நகரத்துக்கு அழைத்துச் செல்லவேண்டும். ஏனெனின், அவர் கண்ணைக் கட்டி விட்டிருக்கிறேன். அவர் அந்தக் குழந்தையின் பிணத்தை எடுத்துக்கொண்டுபோய் ஏதேனும் செய்துவிடுவார். ஆனால் அவர் படிக்கட்டுகளை யெல்லாம் கடந்து தோட்டத்தின் வழியாகச் செல்லுகையில் அந்நியராகிய அவரை இந்நடுநிசியில் யாரேனும் பார்த்துவிட்டால் குழப்பமேற்பட்டு அவர் கைது செய்யப் படுவாராயின் அவரது கையிலுள்ள பிரேதமும்

தெரிந்து விடும். ஆதலால் நீ தயவுசெய்து அதை எடுத்துக்கொண்டு உன் வண்ணாரத்தொழில் செய்யுமிடத்துக்குச் செல்லும் படிக்கட்டுகளின் வழியாக குழந்தையை எடுத்துவந்து இம்மாளிகையின் மதில் சுவரிலுள்ள பின்புற வாயிலினருகில் எங்களிடம் கொடுத்துவிட்டால் மிக்க புண்ணியமாயிருக்கும். நீ இதை செய்வாய் என்றே நம்புகிறேன்.

இளவரசியின் சம்பந்தமான பெரிய ரகசியத்தில் தானும் பங்கெடுத்துக் கொள்ளும்படி நேர்ந்ததை மிகக் கௌரவமாகக் கருதிய வண்ணாத்தி உடனே அக்காரியம் செய்வதாக ஒப்புக் கொண்டாள். அப்போது இராஜம்மாள் இரங்கம்மாளின் அறையில் சென்று தான் சாதித்த காரியத்தைப் பற்றி அம்புஜம், ஜானகி ஆகிய இருவரிடமும் பெருமையாகச் சொல்லிவிட்டு அக்குழந்தையின் பிரேதத்தை எடுத்துக் கொண்டு மீண்டும் வெளியில்சென்று வண்ணாத்தியிடம் அதை ஒப்புவித்து விட்டாள். வண்ணாத்தியும் அதைப் பெரிய துணியில் நன்ருகச் சுற்றி எடுத்துக்கொண்டு வண்ணாரத் தொழில் செய்யும் இடத்தை நோக்கிப் புறப்பட்டதைக் கண்டபின்னர் இராஜம்மாள் இரங்கம்மாளின் அறைக்குச் சென்று தன் முகமூடி, மறைவான ஆடை முதலியவற்றை அணிந்துகொண்டு டாக்டரை வெளியில் அழைத்துச் செல்லலானாள். அவர்கள் இரகசியமாகப் படிக்கட்டுகளைத் தாண்டி தோட்டத்தில் வந்தபின்னர் இராஜம்மாள் டாக்டரின் கையில் பணமுடிப்பு ஒன்றைக்கொடுத்து, 'உன்னை அதிக நேரம் நிறுத்திவிட்டேன்' என்ருள்.

அதற்கு டாக்டர், 'இல்லையம்மா! பிரதிதினமும் எனக்கு இப்படிப்பட்ட கேஸ் ஒன்று அகப்பட்டால் எவ்வளவோ சந்தோஷமாக இருக்குமே' என்ருன்.

பிறகு அவர்கள் பேசாமல் மௌனமாகச் சிறிது தூரம் சென்றார்கள். தோட்டத்தைக் கடந்து பின்புறவாயிலுக்குச் சென்று பார்த்ததும் அங்கே வண்டியைக் காணோம். ஆதலின் டாக்டரும், இராஜம்மாளும் சிறிதுநேரம் காத்திருந்தார்கள். அப்போது டாக்டர், 'அப்பிரேதத்தை நாமே கொண்டுவந்து விட்டிருக்கலாமே? நீ ஏன் அப்படிச் செய்யவில்லை' என்று கேட்டார். அதற்கு அவள், 'உன்னை யாரேனும் பார்த்துவிட்டு அதனால் சந்தடி ஏற்பட்டு விட்டால் ஆபத்து வந்துவிடுமே என்று அஞ்சினேன். ஆனால் எனக்கு மிக்க நம்பிக்கையான ஒரு மாதினிடமே அதைக் கொடுத்திருக்கிறேன். அவள் இதோ வந்துவிடுவாள். இரு, அதோ காலடி சத்தம் கேட்கிறது' என்று சொல்லிக் கொண்டே டாக்டரை அங்கேயே நிறுத்திவிட்டு எந்தப் பக்கத்தில் காலடிசத்தம் கேட்டதோ அதை நோக்கிச் சிலகஜ தூரங்கள் நடந்தாள்.

அப்போது ஆகாயத்தில் மேகம் சிறிது கலைய சந்திர வெளிச்சம் நன்கு தெரிந்ததால் அவள் முகமூடியுடன் நிற்பது தெரிந்தது. அச்சமயம் யாரோ ஒரு ஆள் தன்முழு பலத்தையும் செலுத்தித் தன்மீது கைபோட்டதாக உணர்ந்தாள். என்றாலும் அவள் பயப்பட்டுப் போனதால் கூச்சலிடவும் அவளால் முடியவில்லை. மேலும் சொற்ப நேரத்துக்குள் அம்மனிதனும் அவள் வாயில் ஒரு கைக்குட்டையைத் திணித்து அவளை மிக இலேசாகத் தூக்கிச்சென்று மதில்சுவர் தூரம் சென்றதும் வெளிப்பக்கமாக வீசி எறிந்தான். அப்போது அவள் எங்கே கீழேவிழுந்து இறந்துவிடுமோ என்று பயந்தாள். எனினும் அவளை வெளியில் மற்றொரு ஆள் பிடித்துப் பக்கத்தில் இருந்த ஒரு கோச்வண்டியில் வீசி எறிந்ததை அறிந்தாள். அப்போது அவள் அவ்வண்டியில் மற்றொரு

ஆள் இருப்பதையும் உணர்ந்தாள். ஆனல் அந்த ஆள், 'ஐயோ அப்பா' என்று சொன்னதைக் கேட்டதும் அக் குரல் தொனியால் அவள் வண்ணாத்தி சுவர்ணம்தான் என்று நிச்சயித்தாள். எனவே அவள் தன் வாயிலிருந்த துணியை எடுத்துக்கொண்டு மெதுவாக, 'குழந்தை எங்கே'? என்ருள்.

அதற்கு அவள், 'யாரோ ஒருவர் என்னை எமன் பிடித்ததுபோல் பிடித்து சுவர்மீது வீசி எறியும்போது நான் பயத்தால் குழந்தையைத் தோட்டத்திலேயே போட்டுவிட்டேன்' என்ருள். அதைக்கேட்ட இராஜம்மாள், 'என் கதியும் அப்படித்தான் ஆயிற்று; ஐயோ குழந்தை; இப்போது என்ன நேருமோ தெரியவில்லையே' என்ருள். அதற்கு வண்ணாத்தி தன் மெய் நடுங்க 'என்ன ஆகுமோ? கடவுள்தான் அறியவேண்டும். என்னை நீ பெரிய ஆபத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டாயே' என்ருள்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண் டிருக்கையில் வண்டிக்காரன் ஒருவன் அவ்வண்டியில் நுழைந்ததால் அவர்கள் பேசுவதை நிறுத்திக்கொண்டு விட்டார்கள். அவன் உள்ளே நுழைந்ததும் கோச்சின் கதவுகள் மூடப்பட்டன. மற்ற இருவரும் முன்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு சவுக்காலடித்துக் குதிரையை ஓட்டலாயினர். வண்டி மேற்குப்பக்கமாக ஒரு பெரிய ரஸ்தாவில் ஓடத்தொடங்கியது.

இதற்கிடையில் தோட்டத்தில் நின்றுகொண் டிருந்த மணவாளன், இவ்வளவு பேருடைய காலடி சத்தங்களும் பலர்பேசும் சத்தமும், வண்டி ஓடும் சத்தமும் கேட்டு ஏதோ விபரீதமான ஆச்சர்ய சம்பவம் நேர்ந்திருக்க வேண்டுமென யூகித்துத் தனக்கும் என்ன அபாயம் நேருமோ என்னும்

அச்சத்துடன் மெதுவாக மதில் சுவர் ஏறி வெளியில் குதித்து பரிதிபுரம் நோக்கிச் சென்றான்.

---

111 - வது அத்தியாயம்.

அன்றிரவு இரண்டரை மணி சுமாருக்கு குமாரவேல் பிரபுவும், கர்னல் மாரப்பனும் பரிதிபுரத்துக்குப் பல மைல்களுக் கப்பாலுள்ள ஒரு சிற்றூரின் ஓட்டலில் போய்த் தங்கினர். அப்போது மிக இருட்டாயிருந்தும் அவர்கள் ஒருவாறு சமாளித்துக்கொண்டு ஓட்டலுக்குப் போய்ச் சேர்ந்ததும் அங்குள்ள சேவகன் அவர்களை வரவேற்றான். இரத்தினபுரியைச் சேர்ந்த பிரபுக்கள் அதிக தாராளமாகப் பணத்தைச் செலவழிப்பார்களென்பதை அவன் அறிவானாதலால் இந்த இருவரையும் மிக மரியாதையுடன் வரவேற்று வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தான். அப்போது குமாரவேல்பிரபு ஓட்டல் சேவகனைப்பார்த்து பின்வருமாறு கூறினான்:—எங்களிருவருக்கும் தனித்தனி படுக்கையறை வேண்டியதுதான். ஆனால் நாங்கள் இப்போது படுக்கைக்குப் போகமாட்டோம். இரண்டு மாதர்களை ஏற்றிக் கொண்டுவரும் கோச்வண்டி ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதில் மூன்று ஆட்கள் இருப்பார்கள். வண்டி வந்து சேர்ந்ததும் அவர்களனைவரையும் இந்த அறைக்கு அழைத்து வா. இதற்கிடையில் அம்மாதர்களுக்காகப் படுக்கையைத் தயார்செய்துவை. அந்த ஆட்கள் இருப்பார்களோ அல்லது போய் விடுவார்களோ எனக்குத் தெரியாது. ஆதலின் அவர்களைப் பற்றிக் கவலைவேண்டாம். அவர்கள் வருகிறவரையில் காலங் கழிப்பதற்காக எங்களுக்கு ஏதேனும் தின் பண்டமும் பானமும் கொண்டுவா?

சேவகனும் பிரபு சொன்னதையெல்லாம் கவனத்துடன் கேட்டுவிட்டு அவர் விரும்பிய தின்பண்டத்தையும் பானத்தையும் தந்தபின்னர் வண்டிவருகிறதா என ஆவலுடன் கவனித்துக்கொண் டிருந்தான். சேவகன் சென்றதும் கர்னல் மாரப்பனும் குமாரவேல் பிரபுவும் கதவைப் போட்டுக் கொண்டு சிற்றுண்டி யருந்திய வண்ணம் பின்வருமாறு சம் பாஷிக்க லாயினர்:—

குமாரவேல்:—இந்த இரவு தைரியமும் அச்சமும் கலந்த சம்பவங்கள் நடை பெறுவதா யிருக்கின்றன. நாம் பரிதிபுரத்தை விடும்போது இரவு பதினொருமணி. இப்போது மணி இரண்டரை. இந்த மூன்றரைமணி நேரத்தில் முப்பது மைல் கடந்து வந்தது பெரிய வெற்றிதான்.

மாரப்பன்:—ஆம்; நாம் அதிவிரைவாகப் பிரயாணம் செய்திருக்கிறோம். அம்மாதர்கள் வந்து சேர இன்னும் ஒரு மணிநேரம் செல்லுமென நினைக்கிறேன். அவர்கள் நமது மனைவியர் என நீ இந்த ஓட்டல் சேவகனிடம் சொல்லி யிருக்கக் கூடாதா?

குமாரவேல்:—அப்படிக் கூறவில்லை. ஆயினும் இங்கு எவ்வாறு கூறினும் பாதகமில்லை. இது பரிதிபுரம் தாலுகா எல்லையைக் கடந்து விட்டதால் இங்கு அவ்வளவு போலீஸ் பயமில்லை. அப்படித்தான் ஏதாவது விஷயம் வெளியானாலும் நம்மை எவ்வித தொந்தரையும் செய்யக் கூடியவர்கள் இங்குயாருமில்லை, மேலும் இப்படிப் பட்ட பல தகராறுடையவர்கள் தான் இந்த ஓட்டலில் வந்து தங்குவது வழக்கம் ஆதலின் அதைப்பற்றி நீ கவலைப் படாதே.

மாரப்:—நீ சொன்ன விஷயங்களெல்லாம் எனக்கும் தெரியும். ஆனால் அம்மாதர்களின் நன்மைக்காகவே அவர்கள் நம்முடைய மனைவியர் என்று சொல்லிவிட்டிருக்கலாம். நாம் குதிரை சவாரி செய்வதில் அதிக பிரியமுடையவர்களாதலால் முதலில் குதிரைமீது வந்துவிட்டதாகவும், அவர்கள் மெதுவாக கோச்சில் வருவதாகவும் தெரிவித்திருக்கலாம்.

குமார:—கோச் வந்ததும் இந்த ஓட்டல் வேலைக்காரன், நாம் நம்முடைய மனைவியரை மகா அயோக்கியர்களைப்போல் காணப்படும் அம்மூன்று ஆட்களுடைய மேற்பார்வையில் விட்டிருப்பதாக நினைக்கட்டும், உன் அழகிய காதலியாகிய அம்புஜத்தின்பேர் கெட்டுப்போய் விடுமென்று பார்க்கிறாயா. ஆஹா! ஒரு நாளாவது நீ உண்மையில் உன் மனைவியின் விஷயத்தில் இவ்வளவு அக்கரையுடன் இருந்த துண்டா?

மாரப்:—அம்புஜம் விஷயத்தில் அதிக கவலை யுடையவன் போல் நான் பாசாங்கு செய்யவில்லையே? என்மனைவி விஷயத்தில் நான் எப்போதும் கவலை கொண்டதில்லை.

குமார:—ஆனால் நீ மற்றொருவனுடைய மனைவிக்காக அதிக கவலை செலுத்தி யிருக்கிறாய் போலும்!

இச்சொல்லைக் கேட்டதும் மாரப்பன் பாடு திண்டாட்டமாய்ப் போய்விட்டது. முகம் வெளுத்துவிட்டது; கைகால்கள் நடுக்கமெடுத்தன. தன் கையிலிருந்த கத்தியையும் கீழே நழுவ விட்டான். குமாரவேலின் முகம் பார்த்த வண்ணம், 'நீ சொன்னதொன்றும் புரியவில்லையே, என்ன சொல்கிறாய்?' என்றான்.

குமார:—மாரப்பா! நான் என்ன சொன்னேனென்று கேட்கிறாய்? இன்னும் சிறிது நேரத்துக்குள் நீ உன்

அம்புஜத்துடன் ஒருபுறமும் நான் என் ஜானகியுடன் மற்றொரு புறமுமாகப் பிரிந்து போகிறவர்களான படியால் இப்போது பரஸ்பரம் நமக்குள்ள சில சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்வோம். இதோபார்! என்னிடம் நமது பாதுகாப்புக்காக வெனக்கொண்டு வரப்பட்ட கைத்துப்பாக்கி இருக்கிறது. நான் இப்போது கேட்கும் சில விஷயங்களுக்கு நீ உண்மையான பதில் கூறி என் சந்தேகங்களை நிவர்த்தி செய்யா விட்டால் இதனால் சுட்டுவிடுவேன்.

மாரப்:—(மிக்க அச்சத்துடன்) நீ ஏதோ விளையாடுகிறாய்போலிருக்கிறதே.

குமார:—பேசாதே! இடையில் ஒன்றும் கேட்காதே. சென்ற ஒருமாத காலமாக நாம் இருவரும் சிநேகிதர்களாக இருக்கிறோமென்றாலும் நம்மிடையே பாஸ்பரத்துவேஷம் இருந்து வருகிறதென்பதை மறக்க வேண்டாம். ஆகவே நாம் இன்னும் சொற்பநேரத்தில் பிரிந்து விடுவதற்குள் நீ என் சந்தேகத்தை நிவர்த்தி செய்துவிட வேண்டும். என் சந்தேகம் என்ன என்று நான் சொல்ல மாட்டேன். நீ உன் முகம் பார்க்கும்போதே நீ எல்லா விஷயங்களையும் அறிந்துகொண்டு விட்டாய் என்று தெரிகிறது. நீ சொல்லிவிட்டால் நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்.

மாரப்:—முழுதும் சொல்; பிரபுவே! விஷயத்தைச் சொல்.

குமார:—நான் ஜானகியுடன் இரத்தினபுரி வந்திருக்கிறேன் என்னும் சங்கதி என் மனைவிக்குத் தெரிந்தால் அவள் விவாகரத்து செய்துகொள்ள இதை ஆதாரமாகக் கொள்வாள். ஆதலின் நானே முதலில் விவாகரத்து

விஷயத்தில் பிரயத்தனப்படவேண்டும்; அல்லது அவள் மீது வியபிசாரக் குற்றமாவது செலுத்தி என் குற்றத்தை மறைக்கவேண்டும். இப்போது என் நிலைமை உனக்குத் தெரிகிறதா? ஆதலின் எனக்கு வேண்டிய விஷயத்தைச் சொல்லக்கூடியவன் இப்பூவுலகில் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. எனவே உனக்கும் என் மனைவிக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றிய விவரத்தை ஒன்றும் விடாமல் உண்மையைச்சொல். இன்றேல் உன்னை நான் விடமாட்டேன்.

இவ்வாறு கூறும்போது குமாரவேல் கையில் கைத்துப்பாக்கியை ஏந்தி பயமுறுத்தியதால் மாரப்பன் உண்மையிலேயே பயந்துகொண்டு அவனுடன் சமாதானம் செய்து கொள்ளக் கருதி எல்லா விஷயங்களையும் ஒன்றும் விடாமல் கூறிவிட்டான். அப்போது எப்படி உலகாம்பாள் என்னும் உலகநாயகிச் சீமாட்டி, ஜகதாள் ஆகிய இவ்விருவர் உதவியாலும் தான் குமாரவேலின் மனைவியாகிய ஏகநாயகிச் சீமாட்டியின் சம்பந்தம் பெற்றான் என்பதையும், ஏகநாயகி கள்ளக் கையெழுத்திட்ட பில்களைக் கொடுத்திட்டதையும், எவ்வாறு 'கௌரியின் வீட்டில் வேலப்பனுக்கும் ஏகநாயகிக்கும் சினேகம் ஏற்பட்டதென்பதையும், தான் எப்படி விடுதலையடைந்தானென்பதையும், ஆகிய எல்லாவற்றையும் விவரமாகக் கூறிவிட்டான். குமாரவேல் இதையெல்லாம் மிகக் கவனத்துடன் கேட்டுக்கொண் டிருந்தான். மாரப்பன் உண்மையைச் சொல்ல மயங்கியபோதெல்லாம் சரியான கேள்வியைக்கேட்டும், துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியும் விஷயங்களை யெல்லாம் கிரகித்தான்.

பிறகு இன்னும் சில விஷயங்களைப்பற்றிக் குமாரவேலும், மாரப்பனும் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால்

அதைப்பற்றி நாம் கவனிக்கவேண்டிய அவசியமில்லை. மாரப்ப னிடமிருந்து எல்லா விஷயங்களையும் கிரகித்துக்கொண்டு விட்டதுபற்றிக் குமாரவேல் உள்ளுக்குள் சந்தோஷமடைந் தான். மாரப்பன் பயந்துவிட்டிருக்கிறான் என்பதை யறிந் ததே எல்லாவற்றையும் இழுக்கச் சௌகரியப்பட்டது. அப் போது அவன் மாரப்பனைப் பார்த்து, "அப்படியானால் என் மனைவி என்னும் பெயர் பெற்றிருக்கும் அந்த அயோக்கிய மாதைப்பற்றிப் பேசவேண்டிய விஷயங்கள் பேசியாய்விட் டது. இப்போது நீ, உன்னிடம் ஒருகாலத்தில் அளவிலா வெறுப்படைந்திருந்த மதனவல்லியை எப்படிச் சமாதானப் படுத்தினாய் என்பதைச் சொல்லவேண்டும்" என்று மிரட்டி னான்.

மாரப்:—சிறையிலிருந்து நான் வெளிப்பட்டதும் என்னை மன் னித்துக் காப்பாற்றும்படி அவளுக்கு ஒரு கடிதம் எழு திக் கேட்டுக்கொண்டேன். அப்போது அவள் என்னை நேரில் அழைத்து உனக்குக் கொடுத்திருப்பதுபோன்ற அதே வேலையைச் செய்யும்படி என்னைப் பாஞ்சால தேசத்தின் தலைநகராகிய பரிதிபுரத்துக்கு அனுப்பினாள்.

குமார:—ஆனால் அவள் உன்னை அன்புடன் வரவேற்று உன்னைப்பார்த்துச் சிரித்தாளா என்பதை நிச்சயமாகச் சொல்.

மாரப்:—இல்லை, இல்லை; அவள் என்னை மிகக் கேவலமான வனாகக் கருதி அலட்சியத்துடன் நடத்தினாள்.

குமார:—சரி, போதுமானது. அவள் உன்னைத் தன் காரி யத்தைச் சாதித்துக்கொள்ளும் பொருட்டு ஒரு கருவி யாக உபயோகித்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய இந்த இழிவான வேலைக்கு நீதான் தக்க ஆள் என்று

நினைத்துவிட்டாள். ஆனால் அவள் என்னையும் அதே நிலைமையில் வைத்திருக்கக்கூடாது.

குமாரவேல் இவ்வாறு கூறிக்கொண்டு வெறுப்படைந் ததைப் பார்த்து மாரப்பன், குமாரவேல் மதனவல்லியின் இன்பத்தை அனுபவித்திருக்க வேண்டுமென்றும், அப்படிப் பட்ட அவனையும் அவள் இவ்வேலைக்கு அனுப்பியபடியால் அவன் வெறுப்படைந் திருக்கிறனென்றும், பொறாமை யாலும் ஆவலினாலுமே அவன் தன்னை அப்படிப்பட்ட கேள் விகள் கேட்டானென்றும் தெரிந்துகொண்டான். இந்த ரக சியத்தைப் பூர்த்தியாக அறிந்துகொண்டு அதன்மூலம் தன் காரியத்தை மதனவல்லியிடம் சாதித்துக்கொள்ள அவன் எண்ணினன். சுயநலம் அதிகரிக்கவே அதை அறிந்து கொள்ள வழி என்னவென்று யோசித்தான். அப்போது தான் குமாரவேல் கைத்துப்பாக்கியைக் கீழேவைத்ததைக் கண்டான். உடனே அவன் அதன்மீது பாய்ந்து அதை எடுத்துக்கொண்டு, "பிரபுவே! இப்போது என்முறை நேர்ந் திருக்கிறது. இதோ பார்! உன்னை நான் சுட்டுவிடுவேன். நீ என் இஷ்டப்படி நடக்கவேண்டும்," என்றான்.

எனினும் குமாரவேல் தைரியத்தை இழந்துவிடாமல் புன்சிரிப்புடன், "முட்டாள்தனமாக நடந்துகொள்ளாதே" என்றான்.

மாரப்:—அதிருக்கட்டும். நீ சில உண்மைகளைச் சொல்லா விட்டால் இதோ இத்துப்பாக்கியை உன்மீது பிர யோகிக்கத் தவறமாட்டேன். முதலாவதாக, உனக் கும் மதனவல்லிக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிய விவ ரத்தைக் கூறு.

குமார:—ஏது; ஒரு நிமிஷத்தில் நீ அதிக தைரியசாலியாய் விட்டாயே? அத்துப்பாக்கியில் ஒன்றுமில்லை, அது கெட்டிக்கப்படவில்லை.

மாரப்:—அப்படியானல் வேடிக்கைக்காகவேனும் உன்னைச் சுடுவதில் அபாயமொன்று மிராதல்லவா? இதோ சுடு கிறேன் பார்.

குமார:—(சிறிது அச்சத்துடன்) இவ்வாறு விளையாடாதே.

மாரப்:—ஓ! இத்துப்பாக்கி கெட்டிக்கப்பட் டிருக்கிறதென் பதில் சந்தேகமில்லை. சிறிது நேரத்திற்குமுன் நான் உன்னிடம் அடங்கி விஷயங்களைச் சொன்னதேபோல் இப்போது நீ உனக்கும் மதனவல்லிக்குமுள்ள சம்பந் தத்தைப்பற்றிய விவரங்களைக் கூறுவிட்டால் நான் உன் னைச்சுடுவேன் என்பது நிச்சயம்.

மாரப்பன் தனக்குள்ள ஆத்திரத்தால் உண்மையிலேயே சுட்டுவிட்டால் என்னசெய்வது என்னும் அச்சத்துடன், “அவள் என்னையும் உன்னைப்போல ஒரு ஏஜெண்ட்டாகவே மதித்து இவ்வேலையில் அனுப்பியிருக்கிருள்” என்றான். அதற்கு மாரப்பன், “இல்லவே இல்லை. நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். நீ அவளுடைய ஏஜெண்ட்டாக மட்டுமில்லை. ஆனல் காதலனுகவும் இருக்கின்றாய், உண்மையை ஒப்புக் கொள்” என்றான்.

மாரப்பன் இவ்விஷயத்தைத் தெரிந்து கொள்வதில் அதிக ஆர்வமுடையவனுய்க் காணப்பட்டதால் அந்த ஆர் வத்தில் ஏதேனும் தொந்தரவு செய்வானென நினைத்து, ‘ஆம், நீ சொன்னது உண்மைதான்’ என்று கூறிவிட்டான். அப்போது மாரப்பன், “எனக்கு அவ்வளவுபோதும்” என்று கூறித் துப்பாக்கியைக் கீழேவைத்து அதுமறுபடியும் யாரு

கும் உபயோகப் படாமலிருக்கும்பொருட்டு அதன்மீது ஒரு சொம்பு ஜலத்தையும் கொட்டினான்.

அதே சமயத்தில் அத்தெருவில் கோச் ஓடிவரும் சத்தம் அவர்களுக்குக் கேட்டது. உடனே இருவரும் ஒவ்வொரு ஜன்னல் அருகில்சென்று பார்த்தார்கள். ஓட்டல் வாயிலில் அவ்வண்டி வந்துநின்றது. தெருவிளக்கின் வெளிச்சத்தில் இருமாதர்கள் வண்டியைவிட் டிறங்குவதைக் கண்டார்கள். உடனே அவர்கள் அம்மாதர்களை வரவேற்கும் பொருட்டுத் தங்கள் அறையின் கதவைத் திறக்கப் பார்த்தார்கள். சில நிமிஷங்களுக்குள் வெறியன், அம்மாதர்க ளிருவரையும் அவ்வறையில் நடத்திவந்து, 'இதோ இவர்கள்தானு நீங்கள் விரும்பிய மாதர்கள்' என்றான். குமாரவேல் அவர்களைக் கவனித்துப் பார்த்ததும் அவர்கள் அம்புஜமும் ஜானகியுமல்ல என்பதை உணர்ந்தான். அப்போது இராஜம்மாளும், வண்ணாத்தி சுவர்ணமும் தங்கள் முகமூடியை எடுத்துவிட்டு அவர்கள் முன்னிலையில் நின்றார்கள்.

அழகிய இளம் பெண்களுக்குப் பதிலாக வயது முதிர்ந்த அழகற்ற இருமாதர்கள் தன்முன் நிற்பதைக்கண்ட குமாரவேல், 'இதென்ன ஆச்சர்யம்? இதென்ன சூழ்ச்சி?' என்றான். அப்போதே மாரப்பனும், 'இந்தக்கிழங்கள் நமக்கேன்? அவ்வழகிய பெண்களைப்போல் இவர்கள் ஆவார்களா? என்றான்.

அச்சமயம் இராஜம்மாள், வெறியனைப்பார்த்து, "அடே அப்பா! வண்டியைச் செலுத்திவரும்போதே இதில் ஏதோ தவறு நிகழ்ந்திருக்கிறதென்று நான் பலமுறை கூறவில்லையா?" என்றாள். அதற்கு அந்த ஆள், "நான் என்ன செய்வேன்? இக்குற்றம் என்னுடையதல்ல. அவர்கள் குறிப்

பிட்டபடியே சிறிதும் தவருமல் நான் நடந்துகொண்டேன்'' என்று பதிலளித்தான். அப்போது அவ்வறையில் நின்று கொண்டிருந்த மற்றுமிரு ஆட்களான தொப்பனும் தொம்பனும், “ஆம்; இவ்விருமாதரையும் அந்த மாளிகையின் தோட்டத்தில் நாங்கள் எந்தெந்த இடத்தில் காத்திருந்தோமோ அங்கேயே பிடித்தோம்'' என்று வெறியனுக்குத் துணையாகக் கூறினர்கள்.

நேயர்களே! ‘எல்லாம் என்ன ஆளும் ஈசன்செயல்' என்னும் ஆன்ருேர்மொழி எக்காலத்தும் அழியாத உண்மையாகும். நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கின்றது. சிற்சில சமயங்களில் நாம் நினைக்கிறபடி நடக்கிறதென்ருலும் மற்றும் சில சமயங்களில் நாம் நினைப்பதற்கு முற்றும் மாருக நடைபெறுகின்றன. இதற்கெல்லாம் காரணம், அவனன்றி ஓரணுவும் அசையாதல்லவா, இவ்வுலகத்தைத் தன் இச்சைப்படி ஆண்டுவரும் எல்லாம் வல்ல இறைவனின் சங்கற்பமெப்படியோ அப்படியே காரியங்கள் நிகழும் என்பதற்கு இச்சம்பவமும் உதாரணமாக இருக்கிறதல்லவா? காமாதுரர்களும், பெண் பித்தர்களுமான குமாரவேலும், மாரப்பனும், சிறிது நேரத்துக்குள் தங்கள் காதலியரான அம்புஜமும், ஜானகியும் வந்து விடுவார்கள். அவர்களுடன் இரத்தினபுரிக்கு ஓடிப்போகலாமென மனப்பால் குடித்தனர். ஆனல் பாவம் அவர்கள் கண்டதென்ன? ஆதலால் எதுவும் இறைவன் திருவுளப்படி நடக்கும் என்பதை மறுக்க முடியாதல்லவா?

இராஜம்மாள் இரத்தினபுரியிலேயே குமாரவேல் பிரபுவைப் பார்த்திருப்பதால், அவரைப்பார்த்து, ‚பிரபுவே! நீ என்னையும், இந்த நல்ல மாதையும் அவமானப்படுத்தி விட்

டாய் என்பது உனக்குத் தெரிகிறதா? இருக்கட்டும். இப்போது மரியாதையாக எங்களைப் பழைய இடத்துக்கே கொண்டுபோய் விட்டு வரும்படி சொன்னால் நாங்களிருவரும் உன்னையும், இதோ உன் சிநேகிதரையும், இந்த உன் ஆட்களையும் மன்னித்துவிடுவோம்' என்று தைரியமாகக் கூறினாள்.

அதைக்கேட்ட குமாரவேல், 'அப்படியானால் போய் விடுங்கள்! எனக் கூறிக்கொண்டே வெறியனிடம் சிறிது பணத்தைக் கொடுத்து, 'இதோ இவர்களை எந்த இடத்திலிருந்துகொண்டு வந்தீர்களோ அங்கேயே அழைத்துப் போய் விட்டுவிடுங்கள்' என்று கட்டளையிட்டான். சிறிது நேரத்துக்குள் எல்லாரும் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டனர். எனவே அவ்வறையில் பழையபடி குமாரவேலும் மாரப்பனும் மட்டுமே தனியே தங்கியிருந்தார்கள்.

அரைமணி நேரம்வரை இவரும் மௌனமாக ஒருவரையொருவர் பார்த்தவண்ணம் உட்கார்ந்து கொண்டிருந்தனர். பிறகு மாரப்பன், 'இப்போது என்னசெய்வது?' என்று குமாரவேலைப் பார்த்துக் கேட்டான்.

குமார:—'என் சம்பந்தப்பட்டவரை நான் இவ்விஷயத்தில் தலையிடுவதில்லை யென்றும், இப்படியே நம் ஊருக்குப் போய்விடுவதென்றும் தீர்மானித்திருக்கிறேன்,' என்று கூறிக்கொண்டே ஓட்டல் சேவகனைக் கூப்பிட்டுத் தன் அறைக்கு வழிகாட்டும்படி சொல்லி கர்னல் மாரப்பன் என்ன செய்கிறான் என்பதையும் கவனியாமல் அவ்வறையை விட்டு வெளியே போய்விட்டான்.

கர்னல் மாரப்பனும் தன் அறையில் தனியே படுத்திருந்து தூங்கிவிட்டு பிறகு மறுநாட்காலை எழுந்து குமார

வேலைப்பற்றி விசாரித்ததில் ஒருமணி நேரத்துக்கு முன்னரே அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டதாகத் தெரிந்தது. அவன் இரத்தினபுரிக்குச் சென்று மதனவல்லியிடம் ஒன்றுக்குப் பத்தாகத் தன்மீது கோட்சொல்லித் தன்மீது குற்றம் சுமத்தவே அவ்வாறு முன்னதாகப்போய் விட்டிருக்க வேண்டுமென்று மாரப்பன் நினைத்துத் தான் அவனைவிட முன்பு அங்குப்போய்ச் சேர்வதெனத் தீர்மானித்தான். அவ்வாறு நினைத்த அரைமணி நேரத்துக்குள் மாரப்பனும் அந்த ஓட்டலை விட்டுப் புறப்பட்டான்.

112-வது அத்தியாயம்

இப்போது நாம் பரிதிபுரத்துக் கருகில், இரத்தினபுரி இளவரசி தங்கியிருக்கும் மாளிகையிலுள்ள இரங்கம்மாளின் படுக்கையறையில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிப்போம். இராஜம்மாள், அம்புஜம், ஜானகி ஆகிய இருவரையும் இரங்கம்மாள் படுக்கைக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கும்படி சொல்லிப் போயிருந்தாள் என்பதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இரங்கம்மாள் அப்போது தான் இறந்துபோன குழந்தையொன்றைப் பிரசவித்திருந்தபடியால் அந்த அயர்ச்சியில் நன்றாகத் தூங்கிவிட்டாள். மற்ற இரு சகோதரிகளும் சிறிதும் சத்தம் செய்யாமல் மௌனமாக உட்கார்ந்துகொண் டிருந்தார்கள். ஆனால் சிற்சில சமயங்களில் இரகசியமாகவும் மெதுவாகவும் ஏதேனும் பேசிக்கொண்டு தங்கள் மூத்த சகோதரியையும் கவனித்து வந்தார்கள். இவ்வாறு ஒருமணி நேரம் கழிந்துவிட்டது; வெளியில் சென்ற இராஜம்மாள் திரும்பி வரவில்லை; பிறகு மற்றொரு மணி நேர

மும் கடந்தது; அப்போதும் காணும். ஆகவே அம்புஜமும் ஜானகியும் அச்சமடைந்தனர். இராஜம்மாளுக்கு என்ன நேர்ந்துவிட்டதோ என்று சந்தேகப்பட்டனர்; அல்லது வழியில் யாரேனும் அடித்துத் துன்புறுத்தினர்களோ என்றும் நினைத்தனர். மணிக்குப் பின் மணியாகக் கழிந்துகொண்டிருந்ததே யொழிய இராஜம்மாள் வரக்காணும். எனவே அச்சகோதரிகளின் சந்தேகமும் அச்சமும் எல்லைகடந்து மீறிவிட்டது. ஆனல் இரங்கம்மாள் அயர்ச்சியினல் ஆழ்ந்த நித்திரையில் தான் இருந்தாள்.

அவ்வறையில் இருந்த கடிகாரத்தில் மணி இரண்டரை ஆயிற்று. அப்போது இராஜம்மாள் வெளியேபோய் மூன்று மணி நேரமாகியும் வரவில்லை. ஆதலால் வண்ணாத்தி சுவர்ணத்துக்கு இது விஷயமாய் ஏதேனும் தெரிந்திருக்குமாவென்று விசாரிப்பதற்காக அம்புஜமும் வண்ணாத்தியின் அறைக்கு மெதுவாக அடிமேல் அடிவைத்துப்போய்ப் பார்த்ததில் அவளையும் அங்குக்காணும். ஆகவே வண்ணாத்தியும் காணுமற்போகவே அச்சகோதரிகளுக்கு அச்சமும் சந்தேகமும் அதிகரித்துவிட்டது. அப்போது சும்மா இருப்பதா அல்லது ஏதேனும் காரியம் செய்வதா என்றும் தெரியவில்லை. இராஜம்மாளும் வண்ணாத்தியும் காணுமற் போனதால் இன்னும் என்னென்ன இரகசியங்கள் வெளியாய் விடுமோ என்று அஞ்சினர்கள். அப்போது சகோதரிகளிருவரும் பின்வருமாறு சம்பாஷித்தார்கள்.

அம்பு:—இப்படிப்பட்ட மனத்துயரத்தை நீண்டநேரம் அனுபவிக்க முடியாதல்லவா? ஆதலின் கீழே தோட்டத்திற்குச் சென்று என்ன நடந்ததென விசாரிக்கலாமென்று நான் தீர்மானித்திருக்கிறேன்.

ஜானகி:—ஐயோ! இரவு மிக இருட்டாக இருக்கிறதே; நீ தனியாகப் போகமாட்டாய், இரங்கம்மாளைத் தனியாக விட்டு விடக்கூடாதாதலால் நானும் உன்னுடன் வருவதற் கில்லை.

அம்பு:—நீ என்னுடன் வரவேண்டுமென்று நான் சொல்லவில்லையே! நீ இங்கேயே இரு. நான்மட்டும் மெதுவாகக் கீழேபோகிறேன். டாக்டர் மணவாளனே இராஜம்மாளையும் வண்ணாத்தியையும் அழைத்துக் கொண்டு போய்விட்டிருப்பார் அல்லது அவர்களிருவரையும் அக்குழந்தையின் பிரேதத்துடன் யாரேனும் போலீசார் பிடித்துக்கொண்டு விட்டிருக்கலாம்.

ஜானகி:—ஓ! பயமா யிருக்கிறது. அப்படியெல்லாம் ஒன்றும் சந்தேகிக்க வேண்டாம். என்னைத்தனியாக இங்கே விட்டு நீ போகலாகாது. நீயும் திரும்பி வராவிட்டால் நான் பின்னர் என்ன செய்வது?

அம்பு:—நான் இங்கேயே தங்கிவிடுவதால் மட்டும் நீ என்ன செய்யப்போகிறாய். அதைரியப் படாதே; இதற்கெல்லாம் பயப்பட்டுவிடக் கூடாது. நீ இங்கேயே இரங்கம்மாளுக்குத் துணையாக இரு. நான் கீழேபோய் விசாரித்து விட்டு வருகிறேன். இப்போது நான் ஏதேனும் செய்யவில்லை யென்றால் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருக்கிறது.

இவ்வாறு கூறிக்கொண்டே அம்புஜம் தன் சகோதரியை ஒருமுறை பார்த்துவிட்டு முகமூடி முதலியவைகளை யணிந்துகொண்டு அவ்வறையை விட்டுப் புறப்பட்டாள். வெளியில் எங்கும் ஒரே இருட்டாய் இருந்த தென்றாலும் அம்புஜத்துக்கு அந்த வழிகளெல்லாம் நன்கு தெரியுமான

தால் அவள் சிறிதும் சிரமமின்றித் தன் அறைக்குப்போய் இளவாசியின் பழைய ஆடைகளை அணிந்துகொண்டு மெது வாகப் படிக்கட்டுகளில் இறங்கிக் கீழே தோட்டத்தில் சென் ருள்.

அங்கு இருட்டுமயமாக இருந்ததே தவிர வேறொன் றும் தெரியவில்லை. எனினும் துணிவுகொண்டு அவள் எதி ரில் காணப்பட்ட ஒரு சிறு ரஸ்தாவின் வழியே நடக்கலா னாள். அப்போது அவளுக்கு ஒவ்வொரு நிமிஷமும் அச்சம் அதிகமா யிருந்தது, ஒருவாறு சமாளித்துக்கொண்டு சென்று கொண்டிருக்கையில் ரஸ்தாவில் வெள்ளையாக ஏதோ ஒன்று அவள் காலிற்பட்டதும் அவள் அச்சத்தின் மிகுதியால் கீச் என்று கதறினாள். எனினும் ஒருவாறு தைரியமடைந்து, அது மாளிகையின் கட்டடத்தில் அமைக்கப்பட்டிருந்த சல வைக்கல் ஏதேனும் விழுந்திருக்குமென நினைத்தாள். மேலும் அடிமேல் அடிவைத்து நடந்து கொண்டிருக்கையில் ஒவ் வொரு நிமிஷமும் அவளுக்குப் பயமாகவே இருந்தது. எதிரி லுள்ள மரங்களிலிருந்து யாரோ இறங்கிவந்து தன் தோள் மீது கைபோடுவதுபோல் சில சமயங்களில் தோன்றும், வேறு சில சமயங்களில் பின்னால் யாரோ வேகமாக நடந்து வருவதாகத் தோன்றும். உடனே அவள் அச்சங்கொண்டு திடீரென்று ஸ்தம்பம்போல் நின்று நாலாபக்கங்களிலும் பார்ப்பாள். அங்கு காற்றடிக்கும் சத்தமும், பக்கத்திலுள்ள ஏரியில் ஓலம் கரையில் மோதும் சத்தமும் கேட்குமே தவிர வேறொன்றும் கேட்காது. இவ்வாறுகச் சொற்பதூரம் சென்றதும் எப்படியாவது பரிதிபுரம்சென்று டாக்டர். மண வாளன் வீட்டுக்கேபோய் இராஜம்மாளைப்பற்றி விசாரிப்ப தென முடிவு செய்தாள். ஆகவே மேல்நோக்கி இன்னும் சற்றுதூரம் நடந்தாள். அப்போது அவள் காலில் அந்த

ரஸ்தாவில் விழுந்து கிடந்த ஏதோ ஒன்று பட்டது. அச்சம யம் அவள் தேகம் முழுவம் நடுக்கமெடுத்தது. அவளுக்கும் தெரியாமலே ஏதோ துக்கம் அதிகரித்தது. ஆதலின் அவள் அது என்ன என்று பார்க்கவேண்டுமென்னும் ஆவலுடை யவளாய்க் குனிந்து அதைக்கையில் எடுத்துப் பார்த்ததில் அது ஒரு சிறு குழந்தையின் பிரேதமாக இருந்ததைக் கண்டு திகைத்துப்போனாள்.

அப்போது அவளுடைய சாதாரண பயமெல்லாம் நீங்கி மற்றும் பெரிய அபாயத்தைப் பற்றிய அச்சம் அதிகரித்து விட்டது. அது தன் சகோதரிக்குச் சொற்பநோத்துக்கு முன் பிறந்த குழந்தைதான் என்று நிச்சயித்தாள். ஆதலின் அது அங்கே எப்படிவந்தது என்பதுபற்றி யோசித்துக்கொண டிராமல் உடனே அதை எங்கேயாவது மறைத்துவிட வேண் டும் என்று நினைத்தாள். ஆனால் எங்கே, எப்படி மறைப்பது என்று அவளுக்கு முதலில் தோன்றவில்லை. அங்கேயே ஒரு குழிதோண்டிப் புதைத்து விடலாமா என்று கருதினாள். ஆனால் மறுநாட்காலை தோட்டக்காரன் புதிதாகக் குழி ஒன்று தோண்டி மூடப்பட்டிருப்பதை யறிந்தால் அது என்னவென்று அவன் மீண்டும் தோண்டினால் பிரேதம் அகப்பட்டு விடுமே என்று அஞ்சினாள். ஆதலின் பக்கத்தி லிருக்கும் ஏரியில் போட்டு விடுவதுதான் உத்தமம் என்று முடிவுசெய்தாள். அப்போது தான் தங்களுடைய சங்கதி எதுவும் வெளியாகாதென்றும் கருதினாள்.

ஆகவே அவள் தைரியமாக அவ்வாறே செய்வதென நினைத்தாளென்றாலும் அதை எடுத்துக்கொண்டு வெளி யேறுவதெப்படி, அந்தத் தோட்டத்தின் மதில்சுவர் வாயில் கதவு மூட்டப்பட்டிருந்தது. எனினும் மாதர்கள் மனம்

வைத்தால் சிறைக்கதவுகளையும் உடைத்தெறிவார்களல்லவா? தன் தங்கை ஜானகி அவளுடைய காதலன் குமாரவேலைச் சந்திக்கும்போதெல்லாம் மதில் ஓரத்திலுள்ள பெரிய கல் பெஞ்சியின் மீது ஏறி அவனை வரவேற்பது வழக்கமல்லவா? அதை அம்புஜமும் அறிவாளாதலால் அவள் அக்குழந்தையின் பிரேதத்துடன் அந்த பெஞ்சியின்மீது ஏறி சுவரைத் தாண்டி வெளியில்சென்று ஏரியை நோக்கி நடக்கலானாள். இவ்வாறு பதினைந்து நிமிஷநேரம் நடந்ததும் அவள் அந்த ஏரிக்கரையை யடைந்தாள். அங்கே அவள் நின்று கொண்டு யாரேனும் மனிதர்கள் வருகிறார்களோ என்று நாற்புறமும் பார்த்தாள். யாரும் காணோம். காலடி சத்தமும் கேட்கவில்லை. ஆகவே அதுதான் தன் காரியத்தை முடிக்கச் சரியான சமயமென்று கருதினாள். எனினும் தான் ஏதோ ஒரு பெரிய குற்றத்தைச் செய்வதுபோன்ற அச்சத்தை மட்டும் அடைந்தாள். எனினும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு அருகிலிருந்த பெரியகல்லை எடுத்துத் தன் கைக்குட்டையால் பிரேதத்துடன் அக்கல்லைவைத்துக் கட்டினாள். பிறகு அவள் தன் சக்தியையெல்லாம் உபயோகித்து அதிகவேகமாக அதை ஏரியில் வீசி எறிந்தாள். அதுவும் பெரிய சப்தத்துடன் ஏரியில் விழுந்து மூழ்கிவிட்டது. ஏதோ பெரிய கஷ்டத்தி னின்றும் விடுபட்டவளேபோல் சிறிது சந்தோஷமுற்றாள்.

ஆனால் மறு நிமிஷமே, அருகிலிருந்த ஒரு பழைய கட்டடத்திலிருந்து சிலர் தன்னை நோக்கி விரைவாக நடந்து வருவதைக் கண்டு அளவிலா அச்சமடைந்தாள். அந்த ஆடவர்கள் பாஞ்சால பாஷையில், 'ஆ கடைசியில் பிடித்து விட்டோம்!' என்று கூறியது அவள் காதில் விழுந்தது. இவ்வாறு விழுந்த ஒரு நிமிஷத்துக்குள் ஆறு போலீஸ்காரர்கள்

தங்கள் உருவிய கத்தியுடன் அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்போது ஒருவர், 'அடடா! அவள் ஒருபெண் ஆயிற்றே; இதில் ஏதோ தவறு இருக்கிறது' என்று கூறினார். ஆனால் மற்றொருவர், 'அதைப்பற்றி நமக்கென்ன! ஏரியில் ஏதோ விழுந்த சத்தத்தை நீ கேட்கவில்லையா?' என்று கேட்டார். இன்னொருவர், 'அவள் யார்? இந்த சமயத்தில் இங்கு ஏன் வந்தாள்? சற்று முன்கேட்ட சப்தம் என்ன என்பது பற்றி அவளே சமாதானம் சொல்லி விடட்டும்!' என்றார்.

அவர்கள் அவ்வாறு பேசியதை யறிந்த அம்புஜம் சற்று தைரியத்துடன், 'உத்தியோகஸ்தர்களே! நான் இங்கே எப்படிப்பட்ட கெட்ட எண்ணத்துடனும் வரவில்லை. ஆனால் இந்நேரத்தில் ஏரிக்கரையில் தனியாக இருக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றியதால் நான் வந்தேன். வேடிக்கையாக ஒருகல்லை எடுத்து ஏரியில்வீசி எறிந்தேன். வேறொன்றும் விசேஷமில்லை' என்று சமாதானம் கூறினாள்.

அப்போது அவர்களில் ஒருவர், 'அவள் பேசுவதைப் பார்த்தால் ஏதோ நல்ல அந்தஸ்திலுள்ள மாதைப்போலவே காணப்படுகிறது' என்றார். மற்றொருவர், 'அப்படியானால் இன்னும் தக்கபடி சமாதானம் கூறவேண்டும் ஏனெனின் நல்ல அந்தஸ்திலுள்ள மாதர்கள் இந்த நேரத்தில் இவ்வாறு இங்கு வரமாட்டார்கள். அவள் நாம் யாருக்காக காத்திருக்கிறோமோ அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவளல்லவென்றாலும் இரவு விசாரணைக் கர்த்தாவிடம் அவளை அழைத்துக்கொண்டு போகவேண்டியது தான் நமது கடமை!' என்றார்.

அதைக்கேட்டு அச்சத்தால் நடுநடுங்கிய அம்புஜம், 'என்ன? என்னை ஒரு மாஜிஸ்ட்ரேட்டிடம் அழைத்துக்

கொண்டுபோகிறீர்களா?' என்று வினவினள். போலீஸ்கூட்டத்தின் தலைவர், 'ஆம்; நிச்சயமாக அழைத்துப்போகிறோம். அதைத்தவிர வேறுவழி எங்களுக்கில்லை' என்று கூறிக் கொண்டே அவளை அழைத்துவரும்படி இதரபோலீசாருக்குக் கட்டளை யிட்டார்.

அப்போது அம்புஜம் தான் எதிர்ப்பதில் பிரயோசனமில்லை யென்றும், எதிர்ப்பதால் சந்தேகங்கள் அதிகரிக்குமென்றும் நினைத்து பாஞ்சால தேச மாஜிஸ்ட்ரேட்டுகள் கூடியவரை தாராள நோக்கமுடையவர்களாதலால் தனக்கு அவ்வளவாக ஆபத்துவராதென்றும் அறிந்து தானும் அவர்களுடன் வருவதாகச்சொல்ல அவர்களனைவரும் பரிதிபுரம் நகரத்துக்குச் சென்றார்கள். கால்மணி நேரத்துக்குள் அவர்கள் இரவு விசாரணைக் கர்த்தா இருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய்ச் சேர்ந்தார்கள். அம்புஜத்தைப் பொது அறையில் உட்காரவைத் திருந்தபோது அங்குக் கூடியிருந்த ஜனங்கள் பார்க்காத வண்ணம் தன் முகமூடியை நன்றாய் இழுத்துப் போட்டுக்கொண்டு அடக்கத்துடன் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள். ஆனால் போலீஸ் தலைவர் அவளை மாஜிஸ்ட்ரேட் உட்கார்ந்திருக்கும் அறையில் அழைத்துச் சென்றதும் மாஜிஸ்ட்ரேட் முதலிய அதிகாரிகளுக்கு மரியாதை காட்டவேண்டுமென்னும் எண்ணத்துடன் தன் முகமூடியை எடுத்துவிட்டாள்.

அப்போது அவளைக்கண்ட மாஜிஸ்ட்ரேட் அவ்வளவு அழகும் யௌவனமும் முகவசீகரமும் வாய்ந்த ஒருமாதை அந்நேரத்தில் தன்கோர்ட்டில் கண்டதும் பிரமித்துப்போனார். ஆகவே அவர், அவளை அந்நேரத்தில் என்ன குற்றத்துக்காக அழைத்து வந்தார்களோ என்பதை அறியும் பொருட்டு போலீஸ் அதிகாரியைப் பார்த்தார்.

அதை அறிந்த சார்ஜண்ட், 'ஐயா, தங்கள் கட்டளைப் படியே நமது ஏரியில் இராக்காலங்களில் பிணங்களை இழுத்துச்செல்லும் மகா கொடியர்களைக் கண்டுபிடிக்கும்பொருட்டு இரவு நான் ஆறு சேவகர்களுடன் ஏரியின் கரையிலுள்ள பழைய கட்டடமொன்றில் பதுங்கி யிருந்தபோது திடீரென்று தண்ணீரில் ஏதோவிழுந்த சத்தம்கேட்டது; உடனே நாங்கள் ஓடிப்போய்ப் பார்த்ததில் அங்கு இம்மாது நின்றிருந்தாள். அவள் தன் விவரமொன்றையும் சொல்லாததால் இங்கே அழைத்து வந்தோம்;' என்றார்.

இதையெல்லாம் கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்த அம்புஜம், 'ஐயா, அந்தபோலீஸ் அதிகாரி என்னைப் பற்றிய விஷயமொன்றையும் சரியாகச் சொல்லவில்லை. 'நான், தனியாக ஒருவாறு ஏகாந்தத்தில் இருக்கவேண்டுமென்னும் என் விருப்பத்துக் கிணங்க நான் இரவில் ஏரிக்கரைக்குச் சென்று உலாவிக்கொண் டிருந்தபோது வேடிக்கையாக அங்கிருந்த கல்லொன்றை எடுத்து ஏரியில் வீசி எறிந்தேன் என்று முன்னமே அவர்களிடம் சொன்னேன்,' என்றாள்.

அப்போது சார்ஜண்ட் என்னும் போலீஸ் அதிகாரி, 'ஆம்; அந்த மாது இந்த விஷயங்களை என்னிடம் கூறினாள் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவை திருப்திகரமான சமாதானமாக எனக்குத் தோன்றவில்லை. முக்கியமாக அவள் தன் பெயரையும் கூறாமல் மறைத்து விட்டாள்,' என்று கூறினார்.

போலீஸ் அதிகாரி கூறியதைக் கேட்ட மாஜிஸ்ட்ரேட் 'அம்புஜத்தை தப்பார்த்து, மெதுவாவும் மரியாதை யாகவும், போலீஸ் அதிகாரி தன் 'கடைமையைத்தான் செய்திருக்கிறார். எனினும் நீ இந்தநேரத்தில் இங்குவர நேர்ந்த விஷயங்

களைப்பற்றிய சமாதானங்களைக் கூறு முன்னரே உன்னை விடுவிடுதலை செய்துவிட நான் தயாராய் இருக்கிறேன். ஆனால் நீ உயர்குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதைமட்டும் ருஜூப்பித்து விடவேண்டும்' என்று கட்டளையிட்டார்.

அதற்கு அம்புஜம், 'ஐயா, என்பெயர், விலாசம்முதலியன சொல்வதில் எனக்குச் சிறிதும் தடையில்லை. ஆயினும் நான் பெரிய இடத்தைச்சேர்ந்தவளாதலால் தாங்கள் இதைப் பகிரங்கமாகப் படுத்திவிடாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனின், இந்நேரத்தில் நான் தனியாக உலாவியதைக் கண்டு பலர் என்னிடம் சந்தேகப்படலாம். எனினும் தங்களை நம்பி நான் சொல்லிவிடுகிறேன். என்பெயர் அம்புஜம்; நான் இந்த ஊருக்குவெளியில் தனியாக இருக்கும் மாளிகையில் தங்கியுள்ள இரத்தினபுரி இளவரசியின் பரிவாரத்தைச் சேர்ந்தவள்' என்று உண்மையைச் சொல்லி விட்டாள்.

மாஜிஸ்ட்ரேட் அவளிடம், 'நீ கூறியது உண்மையாக இருக்கலாம் அதில் எனக்குச் சந்தேகமில்லை. எனினும் நீ கூறுவது உண்மையே என்பதை ருஜூப்படுத்த வேண்டுமல்லவா? ஆதலின் யாரேனும் ஒரு சேவகனை உன்னுடன் இளவரசியின் மாளிகைக்கு அனுப்பட்டுமா? அல்லது நீயே உனக்குத் தெரிந்த கௌரவமான வியாபாரி யாரேனும் தெரிவித்தால் அவரை இங்குவரவழைத்து விசாரித்து உன்னை விட்டு விடுகிறேன். என்ன செய்கிறாய்?' என்று கேட்டார்.

அவர் கூறிய யோசனையைக் கேட்ட அவள் பின்னது செய்வதுதான் நலமென நினைத்து மாஜிஸ்ட்ரேட்டிடமும் பின்னதையே செய்வதாகச் சொன்னாள். அப்போது இளவரசியின் மாளிகைக்கு ஜவுளி தினுசுகளை சப்ளைசெய்யும்

பெரிய வியாபாரியிடம் தானும் தன் சகோதரிகளும் எவ்வளவோ ரூபாய் பெறுமான சாமான்களை வாங்கியிருப்பது ஞாபகத்துக்கு வந்ததால் அவ்வியாபாரியின் விலாசத்தைக் கூறினாள். உடனே சார்ஜண்ட் சற்றும் தாமதமில்லாமல் அவள் கொடுத்த விலாசத்துக்கு ஓடிப்போய் தூக்கத்திலிருந்த அவ்வியாபாரியை எழுப்பி அவரை இருபதுநிமிஷ நேரத்துக்குள் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துவந்தார்? அங்கே அந்த வியாபாரி, அம்புஜம் தனக்குத் தெரியுமென்றும், அவள் உண்மையிலேயே இரத்தினபுரி இளவரசியின் பரிவாரத்தைச் சேர்ந்தவளென்றும் கூறினார். அதைக்கேட்டு மாஜிஸ்ட்ரேட் திருப்தி யடைந்து அவ்விஷயங்களைப் புஸ்தகத்தில் குறிப்பிடக் குனிந்தபோது அம்புஜம் சார்ஜண்ட் இடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்தாள். அதனால் அவர் இவ்விஷயத்தை யெல்லாம் பகிரங்கப் படுத்தக்கூடாதென்பது அவள் அபிப்பிராயம். பிறகு அவள், மாஜிஸ்ட்ரேட் தன்னிடம் மரியாதையுடனும் அன்புடனும் நடந்துகொண்டதற்காக அவருக்கு வந்தனம் செலுத்திவிட்டுத் தனக்குச் சமயத்தில் உதவிபுரிந்த அந்த வியாபாரியுடன் வெளியில் புறப்பட்டாள். வியாபாரியும் அவளை அந்த இருட்டுநேரத்தில் தனியே இளவரசியின் மாளிகைக்குப் போகவேண்டாமென்றும் தானும் கூடவருவதாகவும் சொன்னார். அப்படி இருவருமாகப் போகும்வழியில் அந்தவியாபாரி தன் நிலைமையைப்பற்றிச் சந்தேகப்படாமலிருக்கும்பொருட்டு ஏதேதோ கதைகட்டிச் சமாதானம் சொல்லிவிட்டாள். மேலும் அவர் மாளிகையினருகில் அவளை விட்டுவிட்டுத் திரும்பும்போது மறுநாள் தனக்கும் தன் சகோதரிகளுக்குமாகச் சுமார் இருபது பவுன்களுக்குப் பட்டுத்துணிகளை அனுப்பும்படி அவள் சொன்னதால் அவருக்கு மற்ற விஷயங்கள் மறந்துவிட்டன.

அம்புஜம் மாளிகைக்குத் திரும்பியபோது விடியற்காலை மணி நான்கு இருக்கும். ஆகவே அம்புஜம் ஒன்றரைமணி நேரம் அம்மாளிகையில் இருக்கவில்லை. அப்போது சிறிது வெளிச்சமாக இருந்ததென்றாலும் மூடுபனி மூடிக்கொண்டு ஒருவாறு மங்கலாகவே இருந்தது. மாளிகை மதில்சுவரை எப்படித் தாண்டி உள்ளே செல்வதென்று அவளுக்குத் தோன்றவில்லை. சுவர்மீது ஏறி உள்ளே குதிக்கலாமென்றால் யாரேனும் பார்த்துவிட்டால் என்னசெய்வது என்னும் அச்சம் அதிகமா யிருந்தது. முன்பக்கம் வாயிலுக்குச் சென்று பகிரங்கமாகவே கதவைத் தட்டலாமென்றால் அவள் எவ்வாறு வெளியில்போனாள் என்னும் சந்தேகம் வந்துவிடுமே என்று அஞ்சினாள். ஆகவே சிறிதுநேரம் ஒன்றும் தோன்றாமல் அவள் திக்பிரமை யடைந்திருந்தாள். அப்போது தோட்டக்காரன் ஒருவன் தான் பெருக்கியெடுத்த குப்பைகளை ஒரு கூடையில் எடுத்துக்கொண்டு கதவைத் திறந்துகொண்டு வெளியில்வந்ததைக் கண்டாள். ஆதலின் அவள் சிறிது ஒளிந்திருந்து அவன் அக்குப்பையை எறிவதற்காகச் சொற்பதூரம் சென்றபோது அவள் மெதுவாக அவ்வாயிலின் வழியே உள்ளேபுகுந்து மிக்க ஒய்யாரத்துடன் தைரியமாகத் தோட்டத்தின் வழியே நடந்துசென்றாள். ஆதலின் அவளை யாரும் பார்க்கவில்லை. இவ்வாறாக அவள் தன் சகோதரி இரங்கம்மாளின் அறையை அடைந்தாள். இதற்கிடையில் அம்புஜம் இவ்வளவு நேரமாகியும் வரவில்லையே என்று ஜானகி வருந்திய வருத்தம் வர்ணிக்கமுடியாது. இரங்கம்மாளோ நன்றாய் அயர்ந்து தூங்கிவிட்டபடியால் அவளுக்கொன்றும் தெரியாது. அவளும் அம்புஜம் அவ்வறைக்குத் திரும்பியபோதுதான் விழித்துக்கொண்டாள். இரு சகோதரிகளும் மூத்தவளாகிய இரங்கம்மாளிடம் எதையும் பேச

வில்லை. ஏனெனின் பிரசவத்தால் களைப்பும் மெலிவும் அடைந்திருக்கும் அவள் எத்தகைய விசாரத்தையும் அடைய லாகாதென்பதே அவர்கள் அபிப்பிராயம். மறுபடியும் சிறிது நேரத்துக்கெல்லாம் இரங்கம்மாள் தூங்கிவிட்ட பின்னர் அம்புஜம் தனக்கு நேர்ந்த இன்னல்களைப்பற்றி யெல்லாம் ஜானகியிடம் விவரித்துக்கூறினாள். பிறகு அவர்களிருவரும் இராஜம்மாளும் வண்ணாத்தி சுவர்ணமும் இவ்வளவு நேர மாகியும் வராத காரணமென்னவென்றும், அக்குழந்தையின் பிரேதம் எப்படிக் கீழே விழுந்துவிட்டதென்றும் யோசிக்க லாயினர்.

அதைப்பற்றி அவர்கள் என்னென்ன நினைத்தார்கள் என்பதைப்பற்றி நாம் இங்கு விவரிக்கவேண்டியதில்லை. இவ்வாறு மணிக்குப்பின் மணியாகக் காலங்கழிந்தது. காலையானதும் சகோதரிகளிருவரும் தாங்கள் முன்னாள் இரவு முழுதும் தூங்கவில்லை யென்பதைத் தங்கள் முகக்குறியால் அம்மாளிகையிலுள்ளவர்கள் அறிந்துகொள்ளாம லிருக்கும் பொருட்டு அவர்கள் தங்கள் முகங்களை சோப்பினால் நன்றாகக் கழுவினார்கள். பிறகு சிற்றுண்டிகளைத் தயாரித்துக் காலை ஆகாரத்தை உட்கொண்டார்கள். அப்போது கடிகாரத்தில் மணியும் எட்டு அடித்தது. அச்சமயம் யாரோ அவ்வறையின் கதவைத் தட்டுவதாகக் கேட்டது. உடனே கதவைத் திறந்து பார்த்ததில் இராஜம்மாள் நிற்பதைக்கண்டார்கள்.

இராஜம்மாளும், சுவர்ணமும் பலாத்காரமாகக் கொண்டு போகப்பட்டு மீண்டும் அவ்வாறு கொண்டுபோனவர்களே திருப்பியும் அவர்களை அம்மாளிகைக்குச் சொற்பதூரத்தில் கொண்டுவந்து விட்டுவிட்டதால் அவர்களிருவரும் தனித் தனியே வெவ்வேறு வாயில்களின் வழியாக மாளிகையில் நுழைந்து தங்கள் தங்கள் அறைகளுக்குச் சென்றார்கள்.

எல்லா வேலைக்காரர்களும் தங்கள் தங்கள் காலை வேலைகளில் கவனமாய் இருந்தபடியால் அவர்களை யாரும் கவனிக்க வில்லை. இராஜம்மாள் அறையில் சென்றதும் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு அவரவர்களும் அடைந்த கஷ்டங்களைப்பற்றிப் பரஸ்பரம் விவரித்துக்கொண்டார்கள். அப்போது இராஜம்மாள் முதலில் தானும் வண்ணாத்தியும் அனுபவித்த இன்னல்களைச் சொன்னதால் ஜானகியும் அம்புஜமும் குமாரவேலும் மாரப்பனும் தங்களைப் பலாத்காரமாகத் தூக்கிச்செல்ல செய்த ஏற்பாடுகளின் பலனாகவே இராஜம்மாள் அவ்வாறு அனுபவிக்க நேர்ந்ததென அறிந்துகொண்டார்கள். மேலும்குழந்தையின் பிரேதம் தோட்டத்தில் விழுந்து கிடந்ததன் காரணத்தையும் அறிந்துகொண்டனர். ஆனால் இராஜம்மாள் மட்டும் அப்பிரேதம் பூமியில் புதைக்கப்பட்டு விடாமல் ஏரியில் எறியப்பட்டதுபற்றி அச்சமடைந்தாள். பிறகு அனைவரும் அன்றிரவு எவ்வளவு ஆச்சர்யமும், தைர்யமும், பயங்கரமுமான விஷயங்கள் நடந்தனவென்பதுபற்றிச் சிந்தித்து அப்படிப்பட்ட இரவு வேறு எவருக்கும் எப்போதும் நேர்ந்திராதெனப் பேசிக்கொண்டனர்.

அப்போது ஜானகி, "ஆனால் வண்ணாத்தி சுவர்ணம் இப்போது என்ன நினைக்கிறாள்? எதைப்பற்றிச் சந்தேகப் படுவாள்" என்று பொதுவாகக் கேட்டாள்.

இரா:—அவள் ஒன்றும் சந்தேகிக்கமுடியாது. அவளுக்குப் பாஞ்சாலபாஷை தெரியாததலால் எங்களிருவரையும் கோச்சில் ஏற்றிச் சென்றபோதோ அல்லது திருப்பியழைத்து வந்தபோதே அவ்வண்டியிலிருந்த ஆட்களுடன் நான் பேசியதை அறிந்துகொள்ள முடியவில்லை. மேலும் பல மைல்களுக்கப்பாலுள்ள ஓட்டலில் தங்கியிருந்த குமாரவேல், மாரப்பன் ஆகியவர்களிடம் எங்

களை அழைத்துக்கொண்டு போனபோதும் அவர்கள் உங்களைத்தான் தூக்கிச்செல்ல முயன்றார்களென்பது அவளுக்குத் தெரியாமலிருக்கும் பொருட்டே நான் அநாவசியமான விஷயங்களைப்பற்றி அங்கொன்றும் பேசவில்லை. எனவே அவள் இப்போது நம் விஷயங் களைப்பற்றி ஒன்றுமே யறியாள். மேலும் நேற்றிரவு நடந்த சம்பவத்துக்குக்காரணம் ஏதேனும் ஒரு சமா தானம் அவளுக்குச் சொல்லிவிடவும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

அம்பு:—ஜானகி! நாம் இருவரும் நமது காதலர்களை இழந்து விட்டோமென்றாலும் நேற்றிரவு நடந்த இவ்வளவு சம் பவங்களிடையிலும் நமக்கு எவ்வித துன்பமும் நேரா ததைப்பற்றி நம்மை நாமே பாராட்டிக்கொள்ள வேண் டியதாகத்தான் இருக்கிறது.

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருந்து நான்குமணி நேரத்துக்குப் பின்னர் அதாவது பகல் பன்னிரண்டு மணி சுமாருக்கு இளவரசியுடன் எல்லாப் பெண்களும் சாப்பாட் டுக்காகக் கூடினார்கள். அப்போது இரங்கம்மாள் உள்பட ஒருவரும் தவறாமல் எல்லாப் பெண்களும் அங்கே வழக்கப் படி கூடியிருந்தனர். இரங்கம்மாள் பிரசவித்து பன்னிரண்டு மணி நேரமே கழிந்திருந்ததென்றாலும் இராஜம்மாளின் அற் புத சாமர்த்தியம் காரணமாக எவரும் எத்தகைய சந்தேக மும் கொள்ளாதபடி காரியங்கள் நிகழ்ந்ததுடன் அவள் தயார் செய்துகொடுத்த மருந்தினால் இரங்கம்மாள் அச் சொற்பகாலத்துக்குள் தக்க பலத்தையும் சுறுசுறுப்பையும் அடைந்தாள். மேலும் முகத்தில் சந்தேகப்படக்கூடிய குறிக ளொன்றும் தோன்றாம லிருக்கும்பொருட்டு அவ்வளவு

சாமர்த்தியமாக அலங்கரித்திருந்தாள். இத்துடன் இங்கு நடக்கும் விவரத்தைவிட்டு இரத்தினபுரிக்குச் செல்வோம்.

113 - வது அத்தியாயம்

மேற்கூறிய சம்பவங்கள் நிகழ்ந்த ஒரு மாதத்துக்குப் பின்னர் ஒருநாள் இரவு இரத்தினபுரியில் செல்லப்பப் பிரபுவின் மாளிகையில் வழக்கம்போல பெரிய மனிதர்களெல்லாம் சேர்ந்து நாடகம் நடிப்பதெனத் தீர்மானித்திருந்தார்கள். அன்று மாலே ஏழுமணி சுமாருக்கு நமது மதனவல்லி தன் அறையில்தான் நடிக்கவேண்டிய பாத்திரத்துக்கேற்ற உடைகளே அணிந்துகொண்டிருந்தாள். அவளுடைய அந்தரங்க வேலேக்காரியும், மற்ருெரு வேலேக்காரியும் அவளுக்கு உதவி செய்துகொண்டிருந்தார்கள். அப்போது அவள் எவ்வளவு ரூபலாவண்யத்துடன் தோன்றிருப்பாள் என்பதை நாம் கூறவேண்டியதில்லே. அவள் பாதி நிர்வாணத்துடன் அவளேக் காணும் ஆடவர்கள் எப்படிப்பட்ட மனேஉறுதி யுடையவர்களேயாயினும் உடனே அவளிடம் மோகங்கொண்டு அவ்வின்பத்தை அனுபவிப்பதற்காகத் தங்கள் உயிரையும் பலியிடத்தயாராய் இருப்பார்கள் என்பது நிச்சயம். அவ்வளவு வசிகரமாக அவள் அப்போது காணப்பட்டாள்.

நாடகம் எட்டுமணிக்கு ஆரம்பிக்கப் படவேண்டும். அவள் ஆடை அணிகளால் தன்னே அலங்கரித்துக்கொண்டு தயாரானபோது மணி ஏழரைதான். அவள் தோழிகளே யெல்லாம் அனுப்பிவிட்டுத் தான் நடிக்கவேண்டியபோது சொல்லவேண்டியதைப் படித்துக்கொண்டிருந்தாள். அப்போது அவளுடைய அந்தரங்க வேலேக்காரி உள்ளேவந்து

கர்னல் மாரப்பன் வந்து மற்ருேர் அறையில் தங்கியிருப்ப தாகவும், உடனே பார்க்க விரும்புவதாகவும் அறிவித்தாள். அதற்கு மதனவல்லி, "ஓ, அவன் திரும்பிவிட்டானு? அப் படியானுல் அவன் சிறிதுநேரமே பேசுவதாயின் அவனைச் சந்திக்கிறேன்" என்று கூறிக்கொண்டே அவன் காத்திருந்த அறைக்குச் சென்ருள். அவனைப் பார்த்து அவன் கூறும் விஷயங்களை அறியவேண்டுமென்னும் ஆவலில் அவள் தான் பாதி நிர்வாணமாக இருப்பதையும் கவனியாமல் அவன் எதி ரில்போய் நின்ருள். அங்குச் சென்றதும் அவளுக்குத் தன் நிலைமை ஞாபகத்துக்கு வந்ததென்ருலும் பலர் காணக்கூடிய பிரத்யேக நாடகத்தில் நடிக்கும்போது ஒருவன் பார்ப்பதில் அவளுக்கு எத்தகைய தோஷமும் தோன்றவில்லை.

எனினும் அவளை அவ்வாறு கண்ட மாரப்பனின் உணர்ச்சியில் மாறுதல் ஏற்படாமல் போகவில்லை. அவ ளுடைய அழகைக்கண்டு அவன் முன்னரே மோகங்கொண் டவனுதலால் அப்போதைய உடையும் அலங்காரமும் பாதி நிர்வாணத் தோற்றமும் அவனுக்கு மனேவிகாரத்தை எழுப்பிவிட்டன.

அப்போது மதனவல்லி பெருந்தன்மையாக நடந்து கொள்ளக் கருதி மாரப்பனைப் பார்த்து அங்கிருந்த நாற்காலி யொன்றைச் சுட்டிக்காட்டி அதில் உட்காரும்படி சொல்லி விட்டுத் தானும் அதன் அருகிலிருந்த ஒரு சோபாவில் உட் கார்ந்துகொண்டு, "இன்று இரவு இங்கே ஒரு பிரத்யேக நாடகம் நடப்பதால் இவ்வாறு ஆடை யணிந்திருக்கிறேன். வேறு விசேஷமில்லை" என்ருள்.

மாரப்பன்:—இந்த ஆடை உனக்குப் பொருத்தமாகத்தான் இருக்கிறது. இவ்வளவு அழகாகவும் வசீகரமாகவும்

உன்னை நான் எப்போதும் கண்டதில்லை. ஆ, இப்போது உன் அழகே யழகு.

மதனவல்லி:—போதும்; நிறுத்து, இப்போது விஷயங்களைச் சுருக்கமாகப் பேசி முடிக்கவேண்டும். நீ சாதித்த காரியத்தைப்பற்றி ஒரு வார்த்தையில் சொல்லிவிடு. மீண்டும் நாளையதினம் இங்குவந்து எல்லாம் விவரமாகச் சொல்லலாம்.

மாரப்:—பயனுள்ள காரியமெதையும் செய்ய என்னால் முடியவில்லையென்று ஒப்புக்கொள்ள வேண்டியதாகத்தான், இருக்கிறது.

மதன:—(கோபத்துடனும் ஆச்சரியத்துடனும்) ஒன்றுமில்லையா? ஒன்றும் செய்யவா முடியாமற்போயிற்று?

மாரப்:—ஆம்; ஒன்றும் சாதிக்கமுடியவில்லை. நான் உன்னை ஏமாற்ற முயல்வதில் பயனில்லை. நான் எவ்வளவோ தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் செய்தும் எவ்வித பயனுள்ள காரியத்தையும் முடிக்க முடியவில்லை.

மாரப்பன் தன் முயற்சியில் தோல்வியுற்றான் என்பதனால் மட்டுமன்றி அவன் தன்னைக்காணும் பார்வையாலும் அவனுடைய அந்தரங்க எண்ணத்தை அறிந்துகொண்டு மிகக் கோபமடைந்து, "நீ உன் கடிதங்களில், அச்சகோதரிகளில் ஒருத்தி உன் காதலியாக இருந்துவருகிறாள்" என்று எழுதியிருந்தாயே என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

அதற்கு அவன், "ஆம்; வாஸ்தவமே. என் காரியத்தை முடிப்பதற்காகச் செய்த முயற்சியில் ஒரு சகோதரியின் காதலைப்பெற்றேனே யொழிய அதனால் நானே அவளிடத்தில் ஏமாற்றமடைந்து அவள் தன் காரியத்துக்கு என்னை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்ளும்படி நடந்து

கொள்ள வேண்டியதாயிற்று. சுருங்கக் கூறவேண்டுமாயின் குமாரவேல் பிரபுவும் நானும் பரிதிபுரத்தில் சந்தித்தோம். இருவரும் பரஸ்பரம் சினேகிதர்களாய் எங்கள் நிலைமைகளை யும் சங்கதிகளையும் கூறிக்கொண்டோம்'' என்றான்.

மதன:—அப்படியானால் நீ குமாரவேலிடம், உன்னை அனுப் பியது யாரென்றும், எதற்காகவென்றும் கூறிவிட்டாய் போலும்; அவ்வாறே அவரும் உன்னிடம் முழுவிவ ரத்தையும் அறிவித்தார் போலும்!

மாரப்:—ஆம்; அப்படித்தான் நடந்தது.

மதன:—(தன் மனத்தில் இவ்வாறு அவர்கள் சந்தித்ததால் எத்தகைய கஷ்டமும் ஏற்பட்டுவிடாதென்றும், குமார வேல் தன்னிடம்பெற்ற இன்பத்தைப்பற்றி வெளியிட் டிருக்கமாட்டானென்றும் நினைத்து) சரிதான். நீ நாளை பகல் பன்னிரண்டு மணிக்கு இங்குவந்தால் அப்போது விவரம் பேசிக்கொள்வோம்.

மாரப்:—''மதனவல்லியே! இப்படிப்பட்ட சமயம் மறுபடி யும் வாய்ப்பது அரிது. நாளை நான் வரும்போது நீ இங்கு இல்லையென உன் சேவகர்கள் சொல்லிவிட்டா லும் விடுவார்கள். உனக்கு இன்னும் பதினைந்துநிமிஷ சாவகாசம் இருக்கிறது. அதற்குள் எல்லாம் பேசி விடலாம்'' என்று கூறினான். அப்போது அவன் கெட்ட எண்ணத்துடன் கூடிய பார்வை முழுவதும் அவளுடைய அங்கங்கள் ஒவ்வொன்றின் மீதாகப் பாய்ந்து அவனுக்கு ஒருவகையான மனோவிகாரத்தை உண்டாக்கியதுடன், அவன் அவள்மீது ஏதோ அதி காரமுடையவனா யிருக்கிறான் என்பதைத் தெரியப் படுத்தக்கூடிய வகையில் முகத்தோற்ற முடையவனாயும்

இருந்தான். மேலும் அவன், "நீ எப்போதும் காணப் படாத வகையில் அவ்வளவு ரூபலாவண்ய முடையவ ளாய் இன்று காணப்படுகிறாய். ஆனால் ஆரம்பத்தில் சாந்தமாக இருந்த நீ இப்போது இவ்வளவு கோப மடைவதேன்'' என்றான்.

அதற்கு மதனவல்லி, "நீ இவ்வறையை விட்டு வெளி யில் போ, இன்றேல் இதோ இந்தமணியை அடித்து ஆட் களைக் கூப்பிட்டு உன்னை வெளியில்தள்ளும்படி செய்வேன்'' என்றாள்.

அதைக் கேட்ட மாரப்பனும் நாற்காலியினின்றும் எழுந்து நின்றுகொண்டு, "மீண்டும் என்னை அவமதிக்க உனக்கு அவ்வளவு தைரியமா? இப்போது நீ என் கையில் அகப்பட்டுக்கொண் டிருக்கிறாய். ஆதலின் மரியாதையாக சமாசம் செய்துகொள்வதே நலம்'' என்று தைரியமாய்க் கூறினான்.

மதனவல்லி இன்னும் அதிக கோபத்துடன், "உன் னிடம் அகப்பட்டுக்கொண்டேனா? சில இரகசியமான காரி யத்தில் ஈடுபடும்படியான உன்னை அனுப்பியதனாலேயே நான் உன்னிடம் அகப்பட்டுக் கொண்டதாகவும், அதைக் கொண்டே நீ என்னைப் பயமுறுத்தலாமென்றும் நினைக் கிறாயோ?'' என்று கூறினாளெனினும், மணியை யடித்துச் சேவகனைக் கூப்பிடவில்லை. ஏனெனின் தன் நிலைமை எப் படியிருக்குமோ என்று சிறிது சந்தேகப்பட்டாள்.

மாரப்:—நீ உண்மையையே இப்போது சொன்னாய். நம் மில் ஏதேனும் பேச்சுவார்த்தை இப்போது முற்றி யிருந்தால் அத்தகைய நிலைமைக்கு நீயே காரணமென் பதை அறிந்து கொள்.

மதன:—பைசாவும் கையில் இல்லாமல் ஆபத்தான நிலைமையிலிருந்தும் சிறையிலிருந்தும் விடுதலையடைந்ததை நீ மறந்துவிட்டாய் போலும்! வெளியில் வந்ததும் நீ என்னைத்தான் அண்டினாய். நானும் பழைய விஷயங்களை மறந்து உன்னிடம் அனுதாபங்காட்டி உனக்குச் செலவுக்கு வேண்டிய பணத்தையும் கொடுத்ததற்குப் பிரதியுபகாரம் இதுதானோ? நீ மிக்க துரோகி. நான் உன்னை ஒரு சிறு புழுவை நசுக்குவதுபோல் நசுக்கிவிடுவேன். உன்மீது பல அபாண்டங்களைச் சுமத்தி உன்னை ஒன்றுமில்லாம லாக்கிவிடுவேன்.

மாரப்:—நீ என் விஷயத்தில் இவ்வளவு அலட்சியத்துடன் இருப்பதால் நான் விஷயங்களை வெளியிடவேண்டியதுதான். என் வீட்டில் நான் பிரபுக்களுக்கு விருந்தளித்தபோது நீ என்னைக் காட்டிக்கொடுத்ததை நான் மறக்கவில்லை. அதை எப்போதும் மறக்கவோ மன்னிக்கவோ முடியாது. எனினும் சிறையிலிருந்து வெளிவந்ததும் என் திக்கற்ற நிலைமையையொட்டி உன்னை அண்டினேனேயொழிய உன்னிடத்தில் ஏற்பட்ட சினேகத்தாலன்று. அப்போதெல்லாம் உன்னைப் பழிவாங்கும் காலம் என்று வருமென நான் எதிர்பார்க்கவில்லை. நீ என்னை உன் காரியத்தைச் சாதித்துக்கொள்ள ஒரு கருவியாக உபயோகித்தாயே யன்றி வேறொன்றுமில்லை. அதிலும் இளவரசிக்குத் துணைபுரிய நீ முயன்றிருக்கிறாய். எப்படி யிருப்பினும் உன் இரகசியங்கள் பல எனக்குத் தெரிந்துவிட்டன. இப்போது நீ என் வசம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறாய் என்பதில் தடையில்லை.

மதன:—இதைக்கொண்டே நீ என்னை அச்சப்படுத்தலா மென நினைக்கிறாய் போலும்! உனக்கு வேண்டியதெல் லாம் பணம் தானே! நீ உன்காரியத்தில் வெற்றியடை யாததால் நான் கோபித்துக்கொண்டு உனக்கு ஒன்றும் தரமாட்டேன் என்பதாக அறிந்து அப்பணத்தைப் பறிக்கும்பொருட்டு இந்த சூழ்ச்சி செய்ததுபோல் காணப்படுகிறது. உனக்கு என்ன வேண்டுமென்பதைச் சொல்லி வாங்கிக்கொண்டு போய்விடு. இனி உன்முகத் தையும் பார்க்கமாட்டேன்.

மாரப்:—அவ்வளவு ஆத்திரமாகப் பேசாதே. நான் பணத்தை மட்டும் விரும்புகிறவனல்ல. பணமும் வேண்டியது தான்; அதுவும் தக்கதொரு பெரிய தொகையைக் கொடுக்கவேண்டும். ஆனால் அதுமட்டும் போதாது. பணம் அல்லாமல் வேறொரு பொக்கிஷத்தையும் நீ வைத்துக்கொண்டிருக்கிறாய்.

மதன:—மாரப்பா! இத்துடன் நமது சம்பாஷணை நிற்கட் டும். இதற்குமேல் உன்னுடன்பேச எனக்குச் சாவகாச முமில்லை; இடமும் இல்லை. இதோ நான் மற்றொரிடத் துக்குப் போகவேண்டும். நீ விரும்பும் பணத்தைக் கேள். அதுவும் நாளையதினம் கொடுக்கப்படும். மற்றப் படி நான் பெண்பால் என்னும் முறையில் நீ ஏதேனும் பேசினால் நமது சமாதானத்தை முடித்துவிட்டு உன்னா லானதை நீ பார்த்துக்கொள் எனச் சொல்லிவிட்டு இதோ போய்விடுவேன்.

மாரப்:—இன்னும் பத்து நிமிஷ சாவகாசமிருக்கிறது. அதற் குள் நமது விஷயங்களை ஒருவாறு பேசி முடித்துவிட லாம். நீ உன் நிலைமையைப்பற்றிச் சரியாக அறிந்து

கொள்ளவில்லேபோ லிருக்கிறது. முதலாவதாக, இள வரசரிடம், நீ அவருக்கு விரோதமாக இளவரசியின் விஷயத்தில் சூழ்ச்சிகளைச் செய்துகொண்டிருக்கிருய் எனக்கூறினுல் அவர் என்னசெய்வார் என்பதைக் கவனி.

மதன:—உன் வார்த்தைகளை அவர் நம்பமாட்டார். உன் சங் கதிகளெல்லாம் அவருக்குத் தெரியுமல்லவா? ஆதலின் நீ போய் உனக்கு இஷ்டமான இளவரசரிடம்சொல். இளவரசிக்கு விரோதமாக சூழ்ச்சி நடப்பது உனக்கு எப்படித் தெரியுமென்றே அவர் ஆச்சரியப்படுவார். அச்சங்கதி என்னிடமிருந்து தெரிந்துகொண்டாய் என் பதையோ அல்லது நான் அவருக்கு விரோதமாக உன்னை நியமித்தேன் என்பதையோ அவர் சிறிதும் நம்பமாட்டார்.

மாரப்:—சரி, அப்படியானுல் இப்போது என்னை அதி தீவிர மாக நடந்துகொள்ளும்படி செய்கிருய். இளவரசர் மேற்படி விஷயங்களைத் தான் நம்பமாட்டாரென்றுலும் அவருடைய அவ்வளவு சொத்துக்களையும், கௌரவத் தையும், இன்பங்களையும் அனுபவிப்பவளான அவர் காதலி, குமாரவேல்பிரபுவின் காதலுக்குட்பட்டாள் என்பதை அறிவிக்கும்போதும் என்னை நம்பமாட் டாரா?

இதைக்கேட்ட மதனவல்லி, தலையில் இரும்புக்கம்பி யால் அடிபட்டவளேபோல் திடுக்கிட்டு அழகையும் தைரியத் தையும் இழந்து அச்சத்துடனும் அவமானத்துடனும் சோபாவில் சாய்ந்தாள்.

குமாரவேல்பிரபு எவ்வளவுதான் அயோக்கியனுயினும் தன் மானத்தை இழக்கக்கூடிய இச்செய்தியை அவன்

வெளியில் எங்கும் சொல்லியிருக்கமாட்டான் என நினைத்தாள். ஆனால் அவன் அதைக் கேவலம் அற்பனிலும் அற்பனான மாரப்பனிடம் சொல்லிவிட்டான் என்பதை யறிந்து அவள் மனங்கரைந்து ஒன்றும் பேசமுடியாதவளாய்த் தன் சோபாவின்மீது சாய்ந்து பலபல விஷயங்களைப்பற்றி யோசிக்கலானாள்.

சிறிதுநேரம் அவ்வாறு சாய்ந்திருந்து பலவிதமான யோசனைகளை யெல்லாம் செய்த பின்னர் ஒருவாறு சமாளித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து, "ஐயா, குமாரவேல்பிரபு ஒரு துரோகி; இருக்கட்டும். ஒரு பெண்மணியின் உணர்ச்சியை அறியக்கூடிய சக்தி உனக்கு இருக்குமாயின் எவ்விதமாக நடந்துகொள்ளவேண்டுமோ அந்த முறையில் உனக்கு வேண்டியதைக் கேள்," என்று மிகமெல்லிய குரலுடன் கூறினாள்.

அவருடைய நிலைமையை நன்கு அறிந்துகொண்ட காமாதுரனும் அற்பனுமான கர்னல் மாரப்பன், "நான் கேட்பவைகளா? முதலாவதாக எனக்கு ஐயாயிரம் பவுன்கள் கொடுக்கவேண்டும்; இரண்டாவதாக, நீ குமாரவேல்பிரபுவுக்கு அளித்த இன்பத்தையே எனக்கும் அளிக்கவேண்டும்" என்று சிறிதும் கூச்சமில்லாமல் புன்சிரிப்புடன் கூறினான்.

கர்னலுடைய நிபந்தனைகளைக் கேட்டதும் மதனவல்லி திடுக்கிட்டுப்போனாளென்றாலும் அவன் அவற்றைக்கேட்பானென முன்னமே அறிந்திருந்ததால் அவனைப் பார்த்தவண்ணம் இரண்டாவது நிபந்தனை விஷயத்தில் சிறிது அனுதாபம் காட்டும்படி கேட்டுக்கொள்ளலாமென நினைத்தாள். எனினும் இதற்குள் அவள் உள்ளத்தில் வேறு எண்ணம் தோன்றவே, "இந்த நிபந்தனைகளை வற்புறுத்துவதென நீ உறுதியான முடிவு செய்துவிட்டாயோ?" என்றாள்.

அவள் தன் நிபந்தனைக்குட்படுவதெனத் தீர்மானித்து விட்டாளென்பதை அவள் தோற்றத்தால் அறிந்துகொண்டு மாரப்பன், "ஆம், நான் அவ்வாறே முடிவுசெய்துவிட்டேன்; என் உறுதியை அசைக்க யாராலும் முடியாது," என்று திட்டமாகக் கூறினன்.

அதற்கு மதனவல்லி "அப்படியானல் உன் இஷ்டப்படியே ஆகட்டும், நாளை இரவு பதிநொருமணிக்கு நீ இந்த அரண்மனையின் பின் பக்கத்திலுள்ள வாயிலின் ஓரம் வந்து நின்றிருந்தால் என் அந்தரங்கத்தோழி அங்கே உன்னைச் சந்தித்து உள்ளே அழைத்துவருவாள்" என்றாள்.

மாரப்:—ஆ; உண்மையிலேயே எனக்காகக் கதவு திறக்கப் படும் என எப்படி நான் நம்புவது? ஒருமுறை இந்த அரண்மனையை விட்டு வெளியே போய்விட்டால் பிறகு மறுபடியும் உள்ளே வருவது எளிய காரியமா?

மதன:—நான் பரிபூரணமாக உன்வசம் சிக்கிக்கொண்டிருக்கிறேனல்லவா? உன் நிபந்தனைகளுக் குட்பட்டால் தானே உன் ரகசியத்தை விலைக்குவாங்கிய மாதிரியாகும். இப்போது எப்படி திடீரென்று வெளியேபோ என்று சொல்ல முடியவில்லையோ அவ்வாறே நானையும் உன்னை உள்ளே சேர்க்காமலிருக்க என்னல் முடியாது.

மாரப்:—வாஸ்தவந்தான். என்னை ஏமாற்றக்கூடிய நிலையில் நீ இல்லை. நான் நாளை இரவு பதினொருமணிக்கு நீ குறிப்பிட்ட அந்த வாயிலின் அருகில் வந்து நின்றிருப்பேன் என்பது உன் ஞாபகத்திலிருக்கட்டும்.

அவ்வாறு மாரப்பன் கூறியதும் எழுந்து வெளியே போக முயன்றதும் மதனவல்லியின் அந்தரங்கத்தோழி

அவனே யாரும் அறியாதவிதமாய் அரண்மனைக்கு வெளியில் கொண்டுபோய்விட்டாள். ஏனெனின் அவனைத் தன் எஜமானி ரகசியமாக ஒருவேலையில் அமர்த்தியிருந்தாள் என்பதையும், ஒரு காலத்தில் அவளுக்கே துரோகமாக நடந்துகொண்ட அவன் இப்போது இம்மாளிகைக்கு வந்திருப்பதை இளவரசரோ, செல்லப்பப்பிரபுவோ பார்த்துவிட்டால் ஆச்சரியப்படுவார்களென்றும் அவள் அறிந்ததால், அவ்வாறு ரகசியமாக மாரப்பனை வெளியே கொண்டுபோய் விட்டாள்.

அவன் வெளியே சென்றபிறகு அறையில் தனியாக இருந்த மதனவல்லி தன் நிலைமையைக் கண்டு வருந்தினாள். கர்னல் மாரப்பனுடன் மறுபடியும் சம்பந்தம் ஏற்பட்டதற்காகத் துக்கமடைந்தாள். ஆனால் இப்போது செய்யக்கூடியது ஒன்றுமில்லை. தைரியமிருந்தால் வந்தது வரட்டுமென்று விஷயங்கள் வெளியாவதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்; அல்லது அவற்றை மூடிவைக்க மற்றும் அந்தத் தீயவழியிலேயே செல்லவேண்டும். இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருந்தபோது மணியும் எட்டு அடித்துவிட்டது. ஆ! அவள் நாடகம்நடிக்கும் பண்டபத்துக்குச் செல்லவேண்டிய காலமும் வந்துவிட்டது. ஆதலின் சோபாவை விட்டு எழுந்து எதிரில் இருந்த நிலைக்கண்ணாடியில் முகம் பார்த்துக் கொண்டு தன் முகத்தில் எத்தகைய வருத்தக்குறியும் காணாதபடி தேற்றிக்கொண்டு புன்சிரிப்புடன் நாடக மண்டபம் சென்றாள். உண்மையிலேயே அவள் தோற்றம் அப்போது நிஷ்களங்கமானதாகவே காணப்பட்டது. அவள் அவ்வளவு சாமர்த்தியமாகத் தன் மனோவிகாரங்களை மாற்றிக்கொள்ளக் கூடிய சக்தியும் அறிவுமுடையவளாய் இருந்ததே இதன் காரணமாகும்.

நேயர்காள்! பார்த்தீர்களா? ஒரு பொய்சொன்னால் அதை மறைப்பதற்காக மேலும் பல பொய்கள்சொல்ல நேரிடுகிறதென்று நமது பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். நாமும் அனுபவத்தில் இவ்வுண்மையைக் காண்கின்றோம். பொய்மட்டு மல்ல; எந்தத் தகாதகாரியங்களைச் செய்தாலும் அதை மறைப்பதற்காக மேன்மேலும் தவறான காரியங்களையே செய்ய நேரிடுகின்றது. ஆதலின் நல்லார்களுடன் கூடியும், நல்லார்சொற் கேட்டும் நமது வாழ்க்கையைப்,புனிதமாக வைத்துக்கொள்வதுதான் சிறப்பானதாகும். எனினும் தெரிந்தோ தெரியாமலோ குற்றமிழைப்பது மனித வர்க்கத்துக்குச் சகஜமாதலின் உடனே அக்குற்றத்தை உணர்ந்து அதற்காக வருந்திப் பாவமன்னிப்புத் தேடிக்கொள்வதே நலமன்றி அதை மூடிவைக்க முயல்வது தவறான செயலாகும். நமது மதனவல்லியும் உண்மையிலேயே எவ்வளவு அழகுடையவளோ அவ்வளவு சாமர்த்தியமும் அறிவுமுடையவளாயிருந்தும் ஒருமுறை செய்துவிட்ட தவறுதலைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு மன்னிப்புத்தேடாமல் அதை மூடிவைக்க முயல்வதால்தான் மேலும் மேலும் தீய காரியங்களிலேயே ஈடுபடவேண்டியவளாக இருக்கின்றாள்.

186553
சென்னை-600 008

மேற்படி நாடகம் நடந்த தினத்தின் மறுநாள் காலை சுகசிங்கம் பிரபு தனது மாளிகையில் சிற்றுண்டி யருந்தி உட்கார்ந்த சமயத்தில் தன் மாளிகையின் எதிரில் ஒரு அழகிய வண்டி வந்து நிற்பதைக்கண்டார். தன் ஜன்னல்வழியாக வெளியே பார்த்ததில் அங்குவந்திருப்பது மதனவல்லியே என்று அறிந்தார். சொற்பநேரத்துக்குள், ஒருவன் தன் அறைக்குவந்து, வெளியில் மதனவல்லி வண்டியில் காத்திருப்பதாகவும், சொற்பநேரம் பிரபுவுடன் தன் வண்டியின் அருகிலேயே பேச விரும்புவதாகவும் அறிவித்தான். மதனவல்லியின் பொக்கிஷதாரராக தான் இப்போது அமர்ந்திருப்பதால், பணத்தை விரும்பியே அவள் இப்பொழுது இங்கு வந்திருக்கவேண்டுமென்று நிச்சயித்தவராய், வந்த ஆளுடன் மாளிகையின் வெளியில்சென்று, வண்டியில் தன் தலையை நீட்டி என்னவென்று விசாரித்தார் சுகசிங்கம்பிரபு.

அப்போது தன் வண்டியின் பின்னாலேயே உட்கார்ந்திருந்துவந்த ஒரு மனிதர் வண்டி நின்றதும் சற்றுதூரம் சென்று மறைவாகத் தங்கி சுகசிங்கம் பிரபுவுக்கும் தன் மனைவிக்குமிடையில் என்ன நடக்கிறதெனக் கவனிக்கிறார் என்பதையறிந்த மதனவல்லி வேண்டுமென்றே அவருக்குக் கேட்கும்படி, "ஐயா, நான் போகும்வழியில் தங்கள் வீட்டண்டை நின்று இக்கடிதத்தைத் தங்களிடம் கொடுத்துவிடும்படி செல்லப்பப்பிரபு கட்டளையிட்டார். இது ஏதோ முக்கியமானதெனத் தெரிகிறது. அவர் இதற்குப்பதில் தங்க

னிடமிருந்து ஏதோ விரும்புகிறதாகவும் தெரிகிறது,'' என்ருள். அதற்குச் சுகசிங்கம்பிரபு, "செல்லப்பப்பிரபு எனக்கொரு கடிதம் அனுப்பியதுபற்றி எனக்கு மிகச் சந்தோஷம். அதிலும் அக்கடிதம் உன் அழகியகரத்தால் என்னிடம் கிடைக்கும்படி செய்ததற்காக இன்னும் அதிக சந்தோஷமே. தெய்வயானை வீட்டில் இல்லாததால் மாதர் யாரும் இல்லாத வீட்டில் உன்னை அழைக்க எனக்குச் சம்மதமில்லை. செல்லப்பப்பிரபு பதில் எதிர்பார்க்கிருர் போலும்!'' என்ருர்.

மதனவல்லியும், "எனக்கும் சாவகாசமில்லை; மிக அவசரமாகப் போகவேண்டும்,'' என்ருள். அதற்கு அவர் இரண்டு நிமிஷங்களுக்குமேல் காக்கவைப்பதில்லையென்று கூறிவிட்டுத் தன் மாளிகையில் நுழைந்தார். தன் அறையில் சென்று மதனவல்லிகொடுத்த சிறுமூட்டையை அவிழ்த்துப்பார்த்ததில் தான் அவளுக்குக்கொடுத்த முத்துமாலையில் இருந்த பத்து முத்துக்கள் அதில் இருப்பதைக்கண்டார். அவர் தனக்குள், "இத்துடன் பதினைந்து முத்துக்கள் என்னிடம் திரும்பிவந்துவிட்டன. செல்லப்பப்பிரபு அதிக செலவு செய்யும்படியான நிலைமையை கபூர் கிருஷ்ணன் ஏற்படுத்த வேண்டுமென நான் விரும்புகிறேன். கிருஷ்ணன் தன்னுல் அவ்வாறு செய்ய முடியவில்லையென என்னிடம் சொன்ஞனேயொழிய ஏதோ செய்துகொண்டுதான் இருக்கிருன். இந்தப்பணமும் செல்லப்பப் பிரபுவுக்குத்தான்போலும்'' என நினைத்துக்கொண்டு பதிஞயிரம்பவுன் விலைபெறுமான நோட்டுகளைக் காகிதத்தில் வைத்து மடித்து அதன்மீது செல்லப்பப்பிரபுவின் விலாசத்தை எழுதி அதை வண்டியில் காத்திருந்த மதனவல்லியிடம் கொடுத்துவிட்டார்.

உடனே வண்டி செல்லப்பப்பிரபுவின் மாளிகைக்குச் சென்று சேர்ந்தது. அப்போது அவள் அதுதான் கடைசி

தடவையாகச் சுகசிங்கம்பிரபுவின் தாட்சண்யத்தை எதிர் பார்த்துச் செல்லவதென நினைத்தாள். அவள் வண்டியை விட்டிறங்கி உள்ளே சென்றதும், ஒரு ஆள் அவளிடம்வந்து, அவள் சொல்லியனுப்பியபடியே ,யாரோ ஒரு மாதுவந்து அறையில் காத்திருப்பதாகச் சொன்னான். அப்போது அவள் முகத்தில் ஒரு சந்தோஷக்குறி தோன்றிற்று. அவள் முத லில் தன் அறைக்குச்சென்று சுகசிங்கம்பிரபு கொடுத்த கவரை உடைத்துப்பார்த்து அதில் பதினாயிரம்பவுன் நோட்டு கள் இருப்பதைக்கண்டு ஐயாயிரம் பவுன் நோட்டுகளைத் தன் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு மற்றும் ஐயாயிரம் பவுன் நோட்டுகளைத் தன் பணப்பையில் வைத்துக்கொண்டு வேறு அழகிய உடையையணிந்து தனக்காகக் காத்திருக்கும் மாது இருந்த அறைக்குச்சென்றாள்.

அங்கே காத்திருந்த அம்மாது சுமார் இருபத்துமூன்று வயதுடையவளாயும் கூடியவரை அழகுடையவளாயும் இருந் தாள். அவள் கூந்தல் கருநிறமுடையதாயும், நீண்டும், கண் கள் அழகானவையாயும், வெண்மையான பற்களுடையவ ளாயும் சுருங்கக்கூறுமிடத்துத் தன்னைக் கண்டோரை பிர மிக்கச்செய்யும் ரூபலாவண்யமுடையவளாய் இருந்தாள். அவள் நகரத்திலுள்ள பிரபுக்கள் வீட்டில் பழகினவளென்று லும் பெரிய இடத்துக் குடும்பங்களில் நடந்துகொள்வது போல நடக்க அவளுக்குத் தெரியாது. எனினும் அவள் சுத்தமான ஆடை ஆபரணங்களை யணிந்து பார்ப்பதற்கு ரம் மியமுடையவளாய்க் காணப்பட்டாள். இந்த மாது கர்னல் மாரப்பனுடைய மனைவி. அவள் கசாப்புக்கடை வைத்துத் திரளான செல்வத்தைச் சம்பாதித்த ஒரு பெரிய வியாபாரி யின் குமாரி. அவளுக்குச் சகோதரர்களில்லாததால் பல சகோதரிகளுக்கு மூத்தவளாக இருந்தாள். அவள் பாலிய

முதலே குடும்பத்தைவிட்டுப் பாடசாலை விடுதிகளிலேயே தங்கியிருந்து கல்வி கற்றவளாதலால் அவ்வாறு விடுதிகளில் தங்கியவர்களுக் கிருக்கவேண்டிய சில தவறான நடத்தைகளும் அவளிடம் காணப்பட்டன. படிப்பு முடிந்தபிறகு அவள் தன் மாமன் ஒருவனுடைய சொத்துக்குச் சொந்தக்காரியாகி இரத்தினபுரியின் முக்கிய தெருக்களிலுள்ள ஒரு பங்களாவில் வந்து தங்கினாள். அப்போது அவளைக்கண்டு மோகித்தவர்கள் பலர். எனினும் பலரும் அவளுடைய ஆஸ்தியைக்கண்டே அவளை மணந்துகொள்ள விரும்பினார்கள். அவளை மணந்துகொள்ள விரும்பிய பலருள் கர்னல் மாரப்பனும், கபூர் கிருஷ்ணனும் சேர்ந்திருந்தார்கள். கபூர் கிருஷ்ணன் நீண்ட அடர்ந்த மீசைகளையுடையவனாய் புஜபல பராக்கிரமத்துடன் வீரனைப்போல் காணப்பட்டதால் அவள் முதலில் கபூரையே விரும்பினாள். ஆனால் பின்னர் கபூர் கிருஷ்ணனைவிடக் கர்னல் மாரப்பன் சிறிது பெரிய மனிதனென்றும், பிரபுக்களுடன் கூடிவாழும் இயல்புடையவனென்றும், கர்னல் கபூரைவிடப் பணக்காரனென்றும் தெரியவே அவள் தன் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு கர்னல் மாரப்பனையே மணப்பதெனத் தீர்மானித்தாள்.

இதையறிந்த கபூர்கிருஷ்ணன் பொறாமையுடையவனானான். அவளையாவது கர்னல் மாரப்பனையாவது கொலை செய்து விடுவதாகப் பயமுறுத்தினான். அதன்மீது அம்மாதின் தந்தை போலீசாரிடம் தெரிவித்து கபூர்கிருஷ்ணன் நன்னடத்தையுடன் நடந்துகொள்வதாக ஜாமீன் செலுத்தும்படி செய்துவைத்தான். இதையும் பொருட்படுத்தாமல் கபூர் கிருஷ்ணன் தன்னுடன் மல்யுத்தம் செய்ய வரும்படி கர்னல் மாரப்பனை அறை கூவியழைத்தான். கர்னல் மாரப்பனால் அவ்வாறு செய்ய முடியவில்லை யாதலால் போலீசாருக்குத்

தெரிவித்து அவன் சமாதானத்தைக் குலைத்ததால் அவனைச் சிறையிலிடும்படி செய்தான். எனினும், கபூர்கிருஷ்ணன் எப்படியோ ஜாமீனில் விடுதலையடைந்து வந்து, மாரப்பனின் தோல்வியைப்பற்றி இரத்தினபுரியிலுள்ள சங்கங்களிலெல்லாம் தெரியப்படுத்தி விடுவதாக அச்சுறுத்தினன். மேலும் அவன் எப்படியோ முயற்சிசெய்து அம்மாதையே நேரில் கண்டுபேசித் தன் வலிமையையும் சாமர்த்தியத்தையும், கர்னலின் பயங்கொள்ளித்தனத்தையும் பற்றி விவரமாக அவளிடம் அறிவித்தான். அவளும் இதையெல்லாம் கேள்வி மூலம் அறிந்திருந்ததால் உண்மையில் கர்னல் மாரப்பன் பயங்கொள்ளியே என்றும், கபூர் கிருஷ்ணனே மெச்சத் தக்கவகையில் வீரனாய் இருப்பதால் அவனையே தான் மணந்து கொள்வதுதான் உத்தமமென்றும் கருதினாள். ஆதலின் அவர்களிருவரும் யாருக்கும் தெரியாமல் ஓடிப்போவதென முடிவு செய்தார்கள். அதை அறிந்த அவருடைய பெற்றோர்கள் இதை மாரப்பனுக்கு அறிவித்தார்கள். அவன் நேரில் வந்து கேட்டுக்கொண்டதன்மேல் அவள் மீண்டும் மாரப்பனையே மணந்துகொள்ளவும், அவசியமாயின் அப்போதே அவனுடன் செல்லவும் தீர்மானித்தாள். மாரப்பனுக்கும் அவளுக்கும் விவாகம் நடந்துகொண் டிருந்தபோது கபூர் கிருஷ்ணன் அவ்விடம் சென்று தனக்கு ஏதேனும் பெருந்தொகை கொடுத்துவிட்டால் அவர்களுடைய ஜோலிக்குப் போகாமலிருப்பதாகக் கூறினான்.

கர்னல் மாரப்பனுக்கும் கசாப்புக்கடைக்காரன் புதல்விக்கும் இப்படிப்பட்ட முறையில் சம்பந்தம் ஏற்பட்டது. அம்மாதின் பெற்றோர்கள், அவளைக் கபூர் கிருஷ்ணனிடமிருந்து தப்பவைத்து பிரபுக்களுடன் கூடிவாழும் மாரப்பனுக்குக் கொடுக்கவேண்டுமென்னும் அவசரத்தில் அவளு

டைய ஆஸ்தி அவளுக்குமட்டுமே பயன்படும்படி எழுதி வைக்க மறந்துவிட்டார்கள். ஆதலின் கர்னல் மாரப்பனுக்கே சர்வாதிகாரங்களும் கிடைத்துவிட்டன. எனினும் பெண்ணின் பெற்றோர்கள் பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மிகக் கண்ணியத்துடன் நடந்துகொள்வார்களென நினைத்தார்கள். ஆனால் மாரப்பன் அந்த சொத்துகளையெல்லாம் அழித்துவிட்டுச் சிறைக்குச் சென்று தங்கள் மாளிகையும் ஏலம்போடப்பட்டு அவளும் தன் பெற்றோர்களின் சிறு குடிசைக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது தாங்கள் நினைத்ததற்கு மாறாக மாரப்பனின் குணாதிசயங்கள் இருப்பதை யறிந்தனர். ஆதலின் அவர்கள் அவனை வெறுக்கலாயினர். எனினும் அப்பெண்மட்டும் மாரப்பனுடைய செயல்களை வெறுத்தாளென்றாலும் அவன் மீண்டும் எப்படியாவது பெருந்தொகையைப் பெற்றுத் தன்னை அழைத்தால் அவனுடன்போய் இருப்பதென்றே தீர்மானித்திருந்தாள்; அல்லது தனக்கே ஏதேனும் சொத்து கிடைத்தாலும் அவனை வரவழைத்துத் தன்னுடன் வாழும்படி கூறவும் தயாராக இருந்தாள்.

இப்படிப்பட்ட இந்த மாதுதான், மதனவல்லி கடிதம் எழுதி அனுப்பியதற்கிணங்க அங்கு வந்து காத்திருந்தாள். அவளைக் கண்டதும் மதனவல்லி, "சகோதரியே! இதற்கு முன் உன்னுடன் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால இப்போதேனும் உன்னைக்கண்டு பழகும் படியான சந்தர்ப்பம் நேரிட்டதுபற்றிச் சந்தோஷப்படுகிறேன். என்னிடமிருந்து, நான் உன்னுடன் மிக முக்கியமான விஷயமொன்றைப் பேசவேண்டுமென்று ஒரு கடிதம் கண்டதும் நீ ஆச்சர்யப்பட்டிருப்பாய். மேலும் அக்கடிதம் நீ பெற்றதையும் ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டு

மென்று அதிலேயே எழுதியிருந்தேனல்லவா?'' என்று கூறினுள்.

அதற்கு அம்மாது, "நான் அவ்வாறே ரகசியமாக வைத்துக்கொண்டிருக்கிறேன் என உறுதி கூறுகிறேன். கடிதம் எனக்குக் கிடைக்கும்போது நான் தனியாகத்தான் இருந்தேன். என் பெற்றோர்களும் சமீபத்தில் இருக்கவில்லை. அக்கடிதம் எழுதப்பட்டிருக்கும் தோரணையைப் பார்த்தால் நான் உடனே அதற்குச் சம்மதிக்கவேண்டுமென்று தோன்றிற்று. ஆதலின் நீ தயவுசெய்து அவ்வளவு முக்கியமான விஷயமென்ன என்பதைப்பற்றித் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்,'' என்றுள்.

மதனவல்லி அருகிலிருந்த சோபாவில் உட்கார்ந்துகொண்டு, "அன்புள்ள மாதே! நீ முன்னதாகவே என் நல்லெண்ணங்களை அறிந்துகொண்டதற்காகச் சந்தோஷப்படுகிறேன். உண்மையிலேயே நான் இப்போது முக்கியமானதும், அவசியமானதுமான விஷயத்தைப்பற்றியே பேசப்போகிறேன். நீ என் சகோதரியாக இருந்தால் உன்னிடம் எவ்வளவு அனுதாபங்காட்டுவேனே அவ்வளவு அனுதாபந்தான் இப்போதும் உன் கணவன் உன்னிடம் நடந்துகொள்ளும் விஷயத்தை நான் நன்கு அறிவதால் காட்டுகிறேன். இப்போது நான் அது சம்பந்தமாகத்தான் பேசப்போகிறேன்'' என்றுள்.

அதைக்கேட்ட அம்மாது, "நான் கேள்விப்பட்ட சில விஷயங்களிலிருந்து நீ என் கணவனை வெறுக்கவேண்டுமென்றல்லவா நினைத்தேன்'' என்று ஆச்சர்யத்துடன் கூறினுள்.

மதன:—நீ என்ன கேள்விப்பட்டாய்; யார் உனக்கு இவ் விஷயங்களைச் சொன்னது? நாம் இருவரும் எதையும்

மறைத்துவைக்காமல் உண்மையைப்பேசுவோம். சங்கதிகளை விவரமாகக்கூறு.

அம்மாது:—நான் சில தினங்களுக்குமுன் எதிர்பாராமல் திடீரென்று கபூர் கிருஷ்ணனைச் சந்தித்தபோது அவன் எல்லா விவரங்களையும் கூறினான்.

மதனவல்லியும் கர்னல் மாரப்பனின் மனைவி சம்பந்தமான எல்லா விஷயங்களையும் அந்தக் கபூர் கிருஷ்ணன் மூலமாகத்தான் அறிந்துகொண்டாள். இவ்வாறு அறிந்துகொண்டதன் பயனாகத்தான் மதனவல்லி அந்தமாதை வரவழைக்கவும் அவளுடன்கூடிச் சில ஏற்பாடுகளைச் செய்யவும் சௌகரியமாய் இருந்தது.

மீண்டும் அம்மாது, "கபூர் கிருஷ்ணன் என்னிடம் என் கணவன் உன்னை ஏதோ அவமானப்படுத்தியதாகக் கூறினனே யொழிய எவ்வகையில் எப்படி நேர்ந்தது என்னும் விவரத்தைக் கூறவில்லை" என்றாள்.

மதன:—உனக்கு விவரம் தெரியாதா? உங்களுடைய பெரிய மாளிகையில் உன் கணவன், இளவரசர், சுகசிங்கம் பிரபு முதலியவர்களுக்கெல்லாம் விருந்தளித்த ஒருநாள் இரவு நானும் அம்மாளிகைக்கு வந்திருந்தேனே.

அம்மாது:—இல்லை. அப்போது நான் என் பெற்றோர்களுடன் தங்கப் போய்விட்டிருந்தேன். பிறகு மறுநாள் வந்தபோது மாளிகையிலிருந்த ஆட்களிடமிருந்து விருந்து நடந்த சங்கதி முதலியவற்றை அறிந்தேன். ஆனால் அதைப்பற்றி நான் பொருட்படுத்தவில்லை. இப்போது தான் என் கணவன் அடைந்த கேவலமான கதி நன்கு தெரிகிறது.

மதன:—சரி; நடந்துபோன விஷயங்களைப்பற்றி இப்போது பேசுவதில் பயனில்லை. அப்போது உன் கணவன் என்னிடம் காதல் கொண்டதால் அப்படியெல்லாம் செய்தான்.

அம்:—ஆம்; நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். இப்போது உன்னை நேரில் பார்த்தபிறகுதான் தெரிகிறது. எந்த ஆடவனும் உன்னைக் கண்டமாத்திரத்தில் உன்னிடம் மோகங்கொள்ளாமலிரான். நீ உண்மையிலேயே அவ்வளவு அழகுடையவளாய் இருக்கின்றாய். ஆதலின் என் கணவன் உன்மீது மோகங்கொண்டிருந்தாலும் அவனை நான் மன்னிக்க வேண்டியதுதான்.

மதன:—என்னைப்பற்றி நீ இவ்வளவு புகழ்வதற்காக நான் உனக்கு வந்தனம் செலுத்துகின்றேன். கபூர் கிருஷ்ணன் அன்று நடந்துகொண்ட விதத்தைப்பற்றி உன்னிடம் ஏதேனும் கூறினனா?

அம்:—ஆம்; அவன் என்கணவனைப் பலமாகத் தூஷித்தானும். என் கணவனும் தற்பெருமை காரணமாக உன்னைப்பற்றிப் பொய்யான அவதூறு பேசியதால்தான் அவன் அவ்வாறு திட்டினதாகவும் தெரிகிறது. எனினும் கபூர் கிருஷ்ணன் என் கணவனிடம் விரோதபாவம் கொண்டவனாதலால் அவன் கூறியது எவ்வளவுதூரம் உண்மையோ எனக்குத் தெரியாது.

மதன:—கபூர் கிருஷ்ணனை நீ எப்போதாவது ஒரு சமயத்தில்தான் சந்திப்பது வழக்கமா?

அம்:—இல்லையம்மா! நான் அவனை எப்போதும் சந்திப்பதில்லை. சில வாரங்களுக்கு முன்னர் நான் என் இரு சகோதரிகளுடன் போய்க்கொண் டிருந்தபோது

அவனை அகஸ்மாத்தாகச் சந்தித்தேன். நான் மாரப்பனை மணப்பதற்கு முன் அவன் என்னை மணம் புரிய விரும்பிய சங்கதி உனக்குத் தெரிந்திருக்கலாம். அப்படி கபூர் கிருஷ்ணனை மணம்செய்து கொள்ளாமல் போனதே சரியான காரியமென இப்போது நன்ருகத் தெரிகிறது. கபூர் கிருஷ்ணனின் துஷ்கிருத்தியங்களைப்பற்றி யெல்லாம் கேள்விப்பட்டு வருகிறேன். அவனை மணந்துகொண்டிருந்தால் எவ்வளவு கஷ்டப்படுவேனே அதில் பாதிதான் மாரப்பனை மணந்துகொண்டதால் அநுபவிக்க நேர்ந்தது.

மதன:—கபூர் கிருஷ்ணன் நல்லமனதை யுடையவனேயெனினும் நீ கூறிய கெட்டகுணங்களை யெல்லாம் உடையவன். நாம் இப்போது ஏதேதோ பேசிவிட்டோம். முக்கியமாகப் பேசவேண்டிய விஷயத்தைக் கவனிப்போம். நான் உன் கணவனை எவ்வளவுதூரம் வெறுக்க வேண்டியவளா யிருக்கிறேனென்பதையே அறிந்து கொண்டிருக்கிருய். அப்படி யிருந்தும், அவன் நான்கு மாதங்களுக்கு முன்னர் சிறையிலிருந்து வெளிவந்த போது அவனிடம் கருணைகாட்டி, ஒரு இரகசிய வேலையில் அவனை அமர்த்திப் பாஞ்சாலநாட்டுக்கு அனுப்பினேன். அவன் இப்போது திரும்பியும் வந்திருக்கிருன்.

அம்:—அப்படியானல் அவர் இரத்தினபுரியிலேயே இருக்கிருரா? அவர் வெளிநாட்டுக்குச் சென்ருரெனக் கேள்விப்பட்டேனே யொழிய அவர் திரும்பிவந்தது எனக்குத் தெரியாது.

மதன:—ஆம்; அவன் இப்போதுதான் திரும்பிவந்தான். ஆனால் அவன் அற்பபுத்தி மட்டும் அவனைவிட்டு நீங்கிய பாடில்லை. ஏதோ சில இரகசியங்களை அறிந்துகொண்டு விட்டதால் அதைக்கொண்டே என்னை அழித்துவிடுவ தாகப் பயமுறுத்துகிறான்.

அம்:—ஏன் பயமுறுத்துகிறார்? என்னசங்கதி? எனக்கொன் றும் விளங்கவில்லையே.

மதன:—ஆ! அக்கொடியவனுடைய மனைவியாகிய உன் னிடம் பிரியமில்லாமலும் விசனத்துடனும் விஷயங் களைக் கூறுகிறேன். அவன் என்னைப் பயமுறுத்தியும் கட்டாயப்படுத்தியும், மிரட்டியும் தன் இஷ்டத்துக்குப் பணியும்படி செய்ய விரும்புவதால் விஷயங்களை உன் னிடம் கூறியே ஆகவேண்டும்.

அம்:—ஆ! இவைகளைக்கேட்க மிகக் கவலையாகவும் அச்ச மாகவும் இருக்கிறது. இதற்கென்ன செய்யலாம்? எப் படியாவது அவரை ஏமாற்றி உன்னைக் காப்பாற்ற வேண்டியதுதான்.

மதன:—அதுதான் நானும் நினைத்துக்கொண்டிருக்கிறேன். இவ்விஷயமாக நான் ஒரு யோசனையைக்கூடச் செய் திருக்கிறேன்.

அம்:—அப்படியானால் அதைச்சொல். நான் உனக்கேதே னும் உதவிசெய்ய முடியுமென்று நீ நினைப்பதாயின் அதை என்னிடம் கூறு. நான் அதைச்செய்வதில் சிறிதும் பின்வாங்கமாட்டேன்.

மதன:—ஆனால் நான் சில விஷயங்களைக் கூறுமுன்னர் உன் னிடமிருந்து ஒரு விஷயத்தை அறிந்துகொள்ள வேண் டும். அதாவது நீ மீண்டும் உன் புருஷனுடன் கூடி

வாழச் சித்தமாக இருக்கிருயா? மறுயடியும் குடும்பத்தை நடத்துவதற்குவேண்டிய பெருந்தொகை அளிக்கப்படுமாயின் நீ உன் தந்தை வீட்டைவிட்டு வந்து கணவனுடன் வாழச் சம்மதமா?

அம்:—ஆம்; சம்மதமே! ஆனல் குடும்பத்தை நடத்துவதற்குரிய சௌகரியங்களெல்லாம் அளிக்கப்பட்டால்தான் அவ்வாறு வாழச் சம்மதிப்பேன். மேலும் நான் அவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென நீ சொன்னல் அப்படியே செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

மதன:—அப்படியானல் என் யோசனையைக் கவனித்துக் கேள். நீ ஏதாவது சமாதானத்தை உன் பெற்றோர்களிடம் சொல்லிவிட்டு இன்றுமாலே இங்குவந்து இரவு முழுவதையும் இம்மாளிகையிலேயே கழிக்கவேண்டும். என் மானத்தைக்குலேக்க விரும்பி உன் கணவனை கர்னல் மாரப்பன் இங்கு கட்டாயம்வருவான். அவனே நீ காத்திருக்கும் அறையில் கொண்டுவந்து விடப்படும். அவன் உள்ளே நுழைந்ததும் வெளிப்புறத்தில் கதவு பூட்டப்படுவதில் நான் ஜாக்கிரதையாக இருக்கிறேன். நீ அவனுடன் இரவையெல்லாம் கழித்து நல்லவிதமான தலேயணே மந்திரோபதேசத்தைச் செய்யவேண்டியது.

அம்:—ஆனல் அவர் அதையெல்லாம் பொருட்படுத்தமாட்டாரா? நமது தந்திரங்களேக்கண்டு நகைப்பாரே யன்றி வேறு காரியம் சாதிக்க நம்மால் முடியாதல்லவா?

மதன:—நீ அவனுக்கு எத்தகைய புத்திமதி கூறவேண்டுமென்பதை இன்னும் அறியவில்லே. நல்லவிதத்தில் உபதேசம் செய்தால் அவன் கேட்கமாட்டான் என்பதை நானறிவேன். ஆகவே நீ இப்போது என்னுடன் அதிக

சினேகமாக இருப்பதாகவும், நான் உன்னை மறுபடியும் உயர்ந்த அந்தஸ்துடையவர்களுடைய கூட்டத்தில சேர்க்க விரும்புவதாயும், உன் தந்தையும் உனக்கு வருஷாவருஷம் ஆயிரம் பவுன் தரச் சம்மதித்திருப்ப தாயும், புது மாளிகையொன்று அமர்த்திக்கொண்டு மீண்டும் குடும்பத்தை ஆரம்பிக்க மூலதனமாக ஐயா யிரம் பவுன்களை இப்போது கொடுத்திருப்பதாகவும் ஆதலின் இன்பமாக வாழலாமென்றும் அவனிடம் கூறு.

அம்:—இல்லையே! என் தகப்பனர் அப்படியொன்றும் பணம் கொடுப்பதாக என்னிடம் கூறவில்லையே. மேலும் அப் படி உதவிசெய்யக்கூடிய நிலைமையிலும் அவர் இல் லையே.

மதன:—இல்லை. அவைகளையெல்லாம் உனக்காக நான் செய்யத் தயாராயிருக்கிறேன் ஆனல் உன் பெற்றோர் கள் கொடுப்பதாக நீ மாரப்பனிடம் கூறவேண்டும்.

அம்:—ஆனல் அவ்வளவு உதவிசெய்ய உன்னல் முடியுமா? உண்மையைப் பேசுகிருயா? அல்லது வேடிக்கை செய் கிருயா?

மதன:—இதில் வேடிக்கை செய்வதற்குச் சந்தர்ப்பமில்லை. என் அன்புள்ள சினேகியே! நீ என் நிலைமையை உணரவில்லையா? உன் கணவன், நானே அவனிடம் அடைக்கலம் புகவேண்டுமென்றும், என்னிடமிருந்து பெருந்தொகையைப் பறிக்கவும் விரும்புகிருன், ஆனல் நானே அவனை மிகமிக வெறுக்கிறபடியால் முதல் நிபந் தனைக்குட்படுவதைவிட இறந்துவிடத் தயாராக இருக்

கிறேன். இரண்டாவது நிபந்தனை விஷயத்திலோ இப்போது ஒருமுறை நான் பணம் கொடுத்துவிட்டால் மீண்டும் மீண்டும் அவன் கேட்டுக்கொண்டே யிருப்பான். ஆதலின் அவனுடைய கொடுமையினின்றும் தப்பித்துக்கொள்ள நான் எதையும்செய்து ஆகவேண்டியவளா யிருக்கிறேன். இப்போது நான் சொல்லும் யோசனையின்படி செய்தால் நீயும் சௌகரியமாகவும் சுகமாகவும் வாழச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

அம்:—அப்படியானல் நான் என்ன செய்ய வேண்டுமென்று நீ விரும்புகிறாய்?

மதன:—நான் முன்பு கூறியதுபோல் அவனிடம்கூறி நீ மீண்டும் அவனுடன் வாழவிரும்புவதாகவும், நீ வேண்டிய சௌகரியங்களையெல்லாம் கொண்டுவருவதாகவும் சொன்னால் அவன் உன்னை ஏற்றுக்கொள்வான். வருஷாவருஷம் ஆயிரம்பவுன் உனக்கு வரும்படி இருக்கிறதெனத் தெரிந்தால் உன்னிடம் அவன் அடைக்கலம்புகுவான். அவன் உன் இஷ்டப்படியே நடப்பதாகக் கூறும்போது நீ அவனை ஏற்றுக்கொள்ள ஒரு முக்கியமான நிபந்தனை உண்டு எனக் கூறிவிடவேண்டும். அதாவது என் விஷயங்களையும் உன் கணவனுடைய கெட்ட எண்ணத்தையும் நீ அறிந்திருக்கிறபடியால் அவன் இனி எனக்கு எத்தகைய தொல்லையையும் விளைவிப்பதில்லையென ஒரு உறுதிமொழி அவனிடம் வாங்கிவிடவேண்டும்.

அம்:—ஓ; இப்போது எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது. நீ சொல்லும் யோசனை மிகச் சரியானதே. அதை முற்றிலும் நிறைவேற்றி விடலாமென்றே தோன்றுகிறது.

மதன:—நீ இவ்விஷயத்தில் என்னுடன் ஒத்துழைப்பாயென நம்பியே நான் இவ்விஷயத்தில் இறங்கினேன். இப்போது என்னிடம் ஐயாயிரம் பவுன்கள் இருக்கின்றன. அதை நான் உன்னிடம் மாலையில் தருகிறேன். அதை மாரப்பனுக்குக் காண்பித்து உன்சொல்லின் விவரம் உண்மையென அவன் நம்பும்படி செய்வதுடன் அவன் உன் யோசனையை ஏற்றுக்கொள்ளும்படி அவனை இழுக்கவும் சௌகரியப்படும்.

பிறகு இன்னும் சில திட்டங்களைப்பற்றி அவர்களிருவரும் பேசி முடித்தபின்னர் மாலைவரை இருவரும் பிரிந்திருந்தனர். மாரப்பன் மனைவி தன் பெற்றோர்கள் வீட்டுக்குப் போய்விட்டாள். மதனவல்லி தன் அறையில்போய் உட்கார்ந்துகொண்டு இப்போது நடந்த சம்பவங்களைப்பற்றியெல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்தாள். அப்போது அவளுடைய கணவனான செல்லப்பப்பிரபு அங்கே வந்து தன் மனைவியை நோக்கி, "மதனவல்லி! என் கோரிக்கையைப் பூர்த்தி செய்யக்கூடிய சௌகரியம் கிடைத்ததோ" என்றான்.

அவள், "ஆம், சௌகரியம் கிடைத்தது" எனக் கூறிக்கொண்டே தன் பணப்பையிலிருந்து நோட்டுகளை எடுத்துக் கொடுத்துவிட்டுப் புன் சிரிப்புடன், "ஐயா, சொற்ப தினங்களாகத் தாங்கள் மிதமிஞ்சிய செலவுசெய்ய ஆரம்பித்துவிட்டீர்கள். கபூர்கிருஷ்ணன் தங்களைக் கெட்டவழியில் இழுத்துவிடப்போகிறான். எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறினாள்.

செல்லப்பப்பிரபு அப்போது, "நீ இவ்வாறு பிரசங்கம் செய்வதாயிருந்தால் இந்தா! உன் பணத்தைத் திரும்பி வாங்கிக்கொள். நாம் இருவரும் அந்தரங்கத்தில் நம் இஷ்டப்

படி நடப்பதென்றாலும் வெளித்தோற்றத்தில் நாம் இருவரும் கணவனும் மனைவியும்போல் வாழ்வதென்பது நம்முடைய ஒப்பந்தமல்லவா?" என்றான். அதற்கு அவள் இன்னும் அதிக புன்சிரிப்புடன், "ஆமாம்; அதுதான் நமது ஒப்பந்தம். அதன்படியே நடந்துகொள்வோம். உனக்கு ஏதேனும் வருத்தத்தை யுண்டாக்கியிருந்தால் மன்னித்துவிடவும். கபூர் கிருஷ்ணன் இப்பொழுது இங்கு அடிக்கடிவரப்போக இருப்ப தால் அவன் தங்களை கெட்டவழியில் இழுத்துவிட்டால் என்ன செய்வதென்று அஞ்சினேன்" என்று சொன்னாள்.

செல்லப்பப்பிரபு தன் மனைவியைத் தழுவிக்கொண்டு, "இனிக் கோபவார்த்தைகளை மறந்துவிடுவோம்" என்று சொல்லித் தன் சட்டைப்பையில் நோட்டுகளைப் போட்டுக் கொண்டு அவ்வறையைவிட்டுச் சென்றான்.

PRINTED AT THE "ANANDA BODHINI" PRESS, MADRAS.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஞ ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 4-பாகமும் ...	8	4	தினகரசுந்தரி	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினாபாய் ...	1	12
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம்2பாகம் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தலிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ...	9	10	அமராவதி 2 பாகமும்	4	0
			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 4-பாகம் விலை ரூபா 8-4-0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

இரத்தினபுரி இரகசியம்

ஐந்தாம் பாகம்

115 - வது அத்தியாயம்

இரத்தினபுரி இளவரசரின் கோஷ்டியைச்சேர்ந்த பிரபுக்களில் ஒருவரான செல்லப்பப்பிரபுவின் மனைவியும், இளவரசரின் காமக்கிழத்தியுமான மதனவல்லியும், அதே கோஷ்டியில் ஒருவனாய் இருந்து தன் துஷ்கிருத்தியங்களின் காரணமாகச் சிறைசென்று விடுதலை யடைந்தபின்னர் மதனவல்லியின் கருணையால் பாஞ்சால தேசத்துக்கு ஒரு ரகசிய வேலையை முன்னிட்டுச்சென்று திரும்பியவனான கர்னல் மாரப்பன் மனைவியும் முதல்முறையாகச் சந்தித்து கர்னல் மாரப்பனை எப்படி நல்லவழிக்குக் கொண்டுவருவதென்று யோசித்தநாளன்று இரவு, சுமார் பத்தரை மணிக்கு செல்லப்பப்பிரபுவின் மாளிகையிலுள்ள போஜன அறையில் இளவரசர், கபூர் கிருஷ்ணன், செல்லப்பப்பிரபு ஆகிய மூவரும் சிற்றுண்டி யருந்திக்கொண்டிருந்தனர். அப்போது ஒரு ஆள் அங்கேவந்து செல்லப்பப் பிரபுவினிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு அக்கடிதம் கொண்டுவந்தவர் உடனே பிரபுவைக்காண விரும்புவதாக அறிவித்தான். அக்கடிதம் எழுதப்பட்டிருந்த கையெழுத்தினாலேயே அது யாருடையதென்று அறிந்துகொண்ட செல்லப்பப்பிரபு, தன் ஆசனத்தை விட்டு எழுந்து, "இளவரசரே, கபூர் கிருஷ்ணரே! நீங்கள்

இருவரும் நான் சொற்பநேரம் முக்கிய விஷயமாக வெளியில் போய் வரவேண்டியதா யிருப்பதைப்பற்றி மன்னியுங்கள்" என்றார்.

அதற்கு இளவரசர், "ஆமாம்; முக்கியமான விஷயமே. எழுத்தைப்பார்த்தால் யாரோ ஒரு மாதினுடைய எழுத்தைப் போலக் காணப்படுகின்றது," என்றார். கபூர் கிருஷ்ணனும், "ஆமாம்; அக்கடிதமே ரோஜா மலர் வாசனை வீசுகிறது" என்றான். மறுபடியும் இளவரசர், "செல்லப்பப்பிரபுவே! நீர் போய்வாரும், அதுவரை நானும் கபூர் கிருஷ்ணனும் இந்த ஆட்டத்தை விளையாடிக்கொண்டிருக்கிறோம். இன்றிரவு எனக்கு ஏதோ அதிர்ஷ்டம் கிடைக்கும்போலிருக்கிறது?" என்றார். செல்லப்பப்பிரபுவும் வெளியில் போய்விட்டார்.

அப்போது இளவரசர், கபூர் கிருஷ்ணனைப்பார்த்து, "ஐயா, இதில் ஏதோ மர்மமிருக்கிறது. செல்லப்பப்பிரபுவுக்குக் கடிதம் அனுப்பிய அம்மாது யாராக இருக்கமுடியும்" என வினவினன். அதற்குக் கபூர் கிருஷ்ணன், "செல்லப்பப்பிரபு அக்கடிதத்தை அதிக ஜாக்கிரதையாக மூடிக்கொண்டபடியால் அது இன்னாரால் எழுதப்பட்டதென்று அறிய முடியவில்லை. மேலும் சினேகிதர்களின் இரகசியங்களை அறிய வேண்டுமென்னும் ஆவலும் எனக்குக் கிடையாது.

இளவரசர்:—ஆமாம்; நீ மிகவும் பெரிய மனிதன்தான். இங்கே வா. இந்த மதுபானத்தைக் குடி. இது மிக இனிமையாக இருக்கும்.

கபூர் கிருஷ்ணன்:—(பாட்டில் பாட்டிலாகக் குடித்துக் கொண்டு) இந்தப் பானம் மிக ருசிகரமாக இருக்கிறது. செல்லப்பப் பிரபுவுக்குக் கடிதம் எழுதியவள் யாராயினும் சரி; அவள் சௌக்கியமாக இருக்கவேண்டு

மென்று இதோ இன்னொரு டம்ளர் குடிக்கிறேன், அடடா? மறந்துவிட்டதே! அந்த மாதுக்கு ஒரு கணவன் இருந்தால் அவன் பொருமைப்படாமல் இவர்களுடைய ஆவல் நிறைவேறவேண்டுமெனச் சிந்திக்க வேண்டாமா? இதோ அதற்காக மற்ருெரு டம்ளர் குடிக்கிறேன்.

இள:—இன்று காலை மதனவல்லியுடன் பேசிக்கொண்டிருந்த நூதனமாது யார்? அவள் வெளியில் போனபோது நீயும் அவளைப் பார்த்துச் சிரித்தாயே; அவள் உனக்குத் தெரியும்போலிருக்கிறது.

க-கிரு:—அவளா! ஞாபகத்துக்கு வந்தது. அவள்தான் கர்னல் மாரப்பனுடைய மனைவி.

இள:—என்ன? அந்த அயோக்கியன் மாரப்பனுடைய மனைவியா?

க-கிரு:—ஆம்; அவனுடைய மனைவிதான். அவள் மாரப்பனை மணந்துகொள்வதற்கு முன்னரே எனக்குத் தெரியும்.

இள:—அப்படியா? அவளுக்கு மதனவல்லியிடம் என்ன வேலை!

க-கிரு:—தன் கணவனை மன்னிக்கும்படி கேட்க வந்திருக்கலாம். அவள் அப்படிப்பட்ட இளகிய மனோபாவமுடையவள்.

இள:—அவள் மிக அழகானவளாய் இருக்கின்ருளே. அவளுடைய மார்பும், கணைக்கால்களும் என் மனதைக் கவர்ந்துவிட்டன.

க-கிரு:—அவள் அழகு வாய்ந்தவள் என்பதில் ஆட்சேபணையில்லை. ஆதலின் இதோ அவள் சௌக்கியமாய்

இருக்கவேண்டு மென்பதற்காக மற்ருெரு டம்ளர் குடிக்கிறேன்.

இள:—நீ அவளைப்பார்த்துச் சிரித்தபோது அவளும் புன் முறுவல் செய்த சமயம் அவள் பற்கள் எனக்கு நன்ருகத் தெரிந்தன. அப்பற்களும் வெண்மையாகவும் வரிசையாகவும் அழகாக இருந்தன. அவள் என் மனதை வசீகரித்துவிட்டாள். அவளைப்பற்றி நினைத்தாலே—

க-கிரு:—அவள் எனக்கு மிக நன்ருகத்தெரியும். அவள் விஷயமாகத் தாங்கள் என்னசொன்னுலும் செய்யக் காத்திருக்கிறேன்.

இள:—ஆனுல் அவளைப்பற்றி ஊரில் என்ன வதந்தி? அவள் எப்படிப்பட்ட குணமுடையவள். அவள் மிக அடக்கமானவளோ?

க-கிரு:—அவள் மிக யோக்கியமானவளென்றே கேள்விப் பட்டிருக்கிறேன். உண்மையிலேயே அவள் ஒழுக்கந் தவருதவள் என்பது எனக்கே நிச்சயமாகத்தெரியும். ஆனுல் தாங்கள் அவளைப்பெற விரும்பினுல் அதை எளிதில் செய்துவிடலாம். ஏனெனின் அவள் அப்படிப் பட்ட இளகிய மனமுடையவளாதலால் தக்கபடி பேசி அவளை வழிக்குக் கொண்டுவந்து விடலாம்.

அவர்களிருவரும் அவ்வாறு பேசிக்கொண் டிருந்த போது புகைச்சுருட்டு உபயோகிக்க வேண்டுமென்னும் ஆவல் கபூர் கிருஷ்ணனுக்கு அதிகரிக்கவே இளவரசர், தன் அறையில் இருப்பதாகவும், அவனேபோய் எடுத்துக்கொண்டு வரலாமென்றும் கூறியதால் அதைக்கொண்டுவர கபூர் கிருஷ்ணன் போய்விட்டான். அப்போது சுமார் மணி பதினென்று இருக்கும். கபூர்கிருஷ்ணன், இளவரசரின் அறைக்

குச் செல்லும்வழியில் மதனவல்லியின் அறையினின்றும் மதனவல்லியும், மாரப்பன் மனைவியும் வெளிவந்ததைக் கண்டான். அவர்களும் கிருஷ்ணன்போவதைக் கண்டதால் மாரப்பன் மனைவியை அவன் அறிந்துகொள்ளாம லிருக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் அம்மாதர்களிருவரும் மீண்டும் அறையில் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டனர்.

இந்த சந்தர்ப்பத்தைக்கண்ட கபூர் கிருஷ்ணன் அவர்களுடைய சமாசாரம் பூராவும் தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் எண்ணங்கொண்டான். ஒரேநாளில் இருமுறை அம்மாளிகைக்கு மாரப்பன் மனைவி வரவேண்டிய அவசியமென்ன என்னும் சந்தேகமும் தோன்றலாயிற்று. மேலும் இளவாசருடன் சிறிது நேரத்துக்குமுன் பேசிய விஷயங்களைச் சாதிக்கவும் இதுதான் தருணமெனக்கொண்டான். அன்றியும் மதனவல்லியுடன் சினேகம் என்னும் காரணத்துக்காக மட்டும் அவள் வந்திருக்கமாட்டாளென்றும் நினைத்தான். ஆகவே அவன் அங்கேயே எங்கேனும் ஒளிந்துகொள்ளக் கருதிச் சுற்றிலும் பார்த்தான். வசதியான இடம் ஒன்றும் அகப்படவில்லை. எனினும் தனக்குப்பின்னல் ஒரு கதவு திறக்கப்பட்டிருந்ததை யறிந்து அங்கே நுழைந்து பார்த்ததில் அது ஒரு படுக்கையறையென அறிந்தான். எப்படியாவது இருக்கட்டுமென நினைத்து அக்கதவின் பின்புறமாக மறைந்துகொண்டு கவனித்துக்கொண்டிருந்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் இருமாதர்கள் நடந்துவரும்போது அவர்களுடைய ஆடைகளின் அசைவால் ஏற்படக்கூடிய சத்தம்கேட்டது. மற்றும் சொற்பநேரத்துக்குள் அவர்கள் தான் எந்த அறையில் மறைந்துகொண டிருக்கிறானே அதன் எதிரிலுள்ள ஓர் அறையின்முன் வந்து நின்றதைக் கண்டான். அப்போது மதனவல்லி, "என் அன்புள்ள சிநே

கிறியே! இதோ இந்த அறைதான். விளக்கு எரிந்துகொண் டிருக்கிறது. எல்லாம் தயாராய் இருக்கின்றன'' என்று சொன்னதும் அவன் காதில்கேட்டது. பிறகு அவ்விரு மாத ரும் அவ்வறையில் நுழைந்தார்கள். உடனே கதவு மூடப் பட்டது. இதையெல்லாம் அக்கதவின் துவாரத்தின் வழியே கபூர் கிருஷ்ணன் பார்த்துக்கொண்டிருந்தான்.

சற்றுநேரம் எங்கும் நிசப்தமாயிருந்தது. கபூர் கிருஷ் ணன், அப்போது நடந்தவற்றின் இரகசியத்தை அறிய முடி யாமல் சிறிதுநேரம் திண்டாடினுனென்ருலும், அவன் உல கத்தை நன்ருய் அறிந்தவனுதலால் மதனவல்லி, மாரப்பன் மனைவியாகிய அம்மாதினுடன் எத்தகைய யோசனையுமின்றி சினேகம் செய்திருக்கமாட்டாளென்றும், அவள் அவ்வளவு நேசம் பாராட்டுவதற்கு ஏதேனும் தக்க காரணமிருக்க வேண்டுமென்றும், அம்மாதை அந்த அறையில் அழைத்துச் சென்றதால் அங்கு ஏதோ விசேஷ மிருக்கவேண்டுமென் றும் பலவாறு சிந்தித்தான்.

இவ்வாறு அவன் நினைத்துக்கொண் டிருந்தபோது மற் ெருரு மாது நடந்துவரும் காலடிச்சத்தம் கேட்டது. அவன் அக்கதவிலுள்ள துவாரத்தின் வழியே உற்று நோக்கினுன். மதனவல்லியின் அந்தரங்கத்தோழி வருவதைக்கண்டான். அவள் எதிர் அறைமுன் நின்று மெதுவாகக் கதவைத்தட்டி ளுள். அப்போது அத்தோழி, "அம்மா! நான் செய்யவேண் டியவேலை ஏதேனுமுண்டோ?'' என்ருள். அதற்கு மதன வல்லி,"இல்லை; எல்லாம் நான்செய்து முடித்துவிட்டேன். நீ போகலாம்'' என்ருள். அத்தோழியும் போய்விட்டாள். அவள் போன சற்று நேரத்துக்கெல்லாம் மதனவல்லியும் அறைக்கு வெளியில் வந்து நின்றுகொண்டு மாரப்பன் மனைவியைப் பார்த்து, "அருமை நட்பினளே! நாம் எதிர்பார்க்கிறபடி

காரியங்கள் நிறைவேறட்டும்" என்று கூறிவிட்டு அவ்வறையின்கதவைச்சாத்தி வெளிப்பக்கம் பூட்டி அவ்வாயிலின்கீழே இருந்த சிறு பாயினடியில் அச்சாவியை வைத்துவிட்டுச் சென்றாள். சிறிது நேரத்துக்குள் மற்றோர் அறையின் கதவு சாத்தப்பட்ட சத்தம் கேட்டது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கபூர் கிருஷ்ணன், மிக அவசரத்துடன் இளவரசர் காத்துக்கொண்டிருந்த அறைக்குச் சென்றான்.

வெகு நேரத்துக்குப்பின் கபூர் கிருஷ்ணன் திரும்பி வந்ததால் இளவரசர் அவனைப்பார்த்து, "இவ்வளவு நேரம் என்ன செய்தாய்? நீ போய் இருபது நிமிஷமாயிற்றே. ஒரு ஆளைக்கூப்பிட்டு உன்னைத் தேடச்சொல்லலாமென இருந்தேன்" என்றார்.

க-கிரு:—ஐயா, பேசாதேயும், நான் சொல்வதைக்கேளும், ஒரு நிமிஷமும் வீணாக்குவதற்கில்லை. உலகில் எங்கும் எப்போதும் நடைபெறாத ஆச்சர்யம்.

இள:—என்ன ஐயா! இவ்வளவு அவசரம்? என்ன சங்கதி?

க-கிரு:—கர்னல் மாரப்பன்மனைவி இந்த மாளிகையில் இருக்கிறாள். இன்றிரவெல்லாம் இங்கேயே கழிப்பாளெனத் தெரிகிறது. அவள் இப்போது அவள் படுக்கையறையில் தனியாக இருக்கிறாள். அந்த அறை மதனவல்லியின் அறைகளில் ஒன்று. மதனவல்லிதான் அவளை அவ்வறையில் கொண்டுபோய்விட்டாள். நான் மறைந்திருந்து எல்லாவற்றையும் கவனித்தேன்.

இள:—நீ என்ன குடிமயக்கத்தில் இருக்கிறாயா? அல்லது பைத்தியம் பிடித்துவிட்டதா?

க-கிரு:—இரண்டுமில்லை. தாங்களல்லாமல் வேறு யாரேனும் இந்த சமயத்தில் இவ்வாறு கேட்டிருந்தால் பற்கள்

உதிரும்படி கன்னத்தி லறைந்திருப்பேன். ஆனல் வாருங்கள், இச்சமயத்தை நீர் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இதுதான் நல்லசமயம். தாமதப்படாமல் வாருங்கள்.

இள:—நீ கூறியதெல்லாம் உண்மைதானு? என்று கூறிக் கொண்டே, அவளிடமிருந்த மோகத்தின் மிகுதியால் எழுந்து நடக்கலானுன்.

க-கிரு:—நான் உங்களே அழைத்துச் செல்கிறேன். இன்னும் சற்று நேரத்துக்குள் தாங்கள் விரும்பிய அம்மாதுடன் இன்பம் அனுபவியாவிட்டால் என்னேப் பொய்யனுக வே தாங்கள் கருதலாம்.

இருவருமாகப் புறப்பட்டு தாழ்வாரத்தின் வழியே சென்று மாரப்பன் மனைவி காத்திருக்கும் அறையின் முன் போய் நின்ருர்கள். போகும் வழியிலேயே காமாதுரனுன இளவரசர், தான் சற்றுநேரத்தில் தான் விரும்பிய மாதினு டன்எவ்வாறு இன்பம் அனுபவிக்கப்போகிருேம் என்பதைப் பற்றியே சிந்தித்துத் திருப்தியடைந்தார். அறையின்முன் சென்றதும், கபூர் கிருஷ்ணன் கீழே குனிந்து பாயின் அடியி லிருந்து சாவியை எடுத்தான். இதைக்கண்டு இளவரசர் ஆச் சர்யமடைந்தார். அந்தச்சாவி பாயின்கீழ் இருக்கவேண்டிய காரணமென்னவென்று அவருக்குப் புலப்படவில்லே. கிருஷ் ணன் அச்சாவியினுல் அவ்வறையின் பூட்டைத் திறந்துவிட் டான். கதவு திறக்கப்பட்டதும் ஒரு நிமிஷமும் முன்பின் யோசியாமல் இளவரசர் அவ்வறையில் புகுந்தார்.

கபூர் கிருஷ்ணன் மறுபடி அக்கதவைச் சாத்திப் பூட்டி விட்டு அச்சாவியைத் தன் சட்டைப்பையில் போட்டுக் கொண்டு பழையபடி எதிரேயிருந்த அறையில் புகுந்து கத வின்பின் நின்றுகொண்டு என்ன நடக்கிறதெனக் கவனித்துக் கொண்டிருந்தான். ஏனெனின், அச்சாவியை மதனவல்லி அப்பாயின்கீழ் வைத்ததால் இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டுமென்று அவன் கருதினுன்.

186553

சென்னை-600 008

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரிமீ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி ரகசியம் 5-ம் பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ரூ. 9 10 0
அர்ஜுனஸிங், சுந்தர் ,, 0 2 0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை ரூ. 1 4 0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் ,, 3 4 0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் ,, 2 0 0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் ,, 1 12 0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி ,, 2 0 0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்